Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

DREAM SOLUTIONS PVT LTD
The Solutions People
திவ்யு.com வெளியீடுகள்
இதயம் குளிரும் இனையம்
The King Of Multimedia

சுயகற்றலுக்கான தமிழில்
பல்லூடக குறுவட்டுக்கள்

Ms-Word-xp
Ms-Excel-xp
PowerPoint-xp
Ms-Access-xp
Ms-FrontPage-xp
Ms-Visual Basic
Pagemaker
PhotoShop
CorelDraw
Macromedia Flash
Computer Hardware
3D-Studio Max.
Java
TCP/IP
SQL
Thirukkural
Thamizha
இன்னும் பல...

275, யாழ்வீதி, மானிப்பாய். தொ.இல. 0777 740413

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி - 12 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 14 (27.12.2004) திங்கட்கிழமை இதழ்:88

# கடல் கொந்தளிப்பில் சிக்கிய 10,000 பேர் நாடெங்கும் பலி!



கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறை சந்தைப் பகுதி!



மட்டக்களப்பில் உயிரிழந்த சிறார்களும் தயார் ஒருவரும்!

## ஆயிரக்கணக்கானோரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

இந்து சமுத்திரத்தில் கடலுக்கு அடியில் ஏற்பட்ட பூகம்பத்தை அடுத்து ஏற்பட்ட பெரும் கடற்கொந்தளிப்பினால் இலங்கையின் வடக்கு - கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் பரிதாபகரமாக உயிரிழந்ததாக அஞ்சப்படுவதுடன், ஆயிரக் கணக்கானோர் காணாமற்போயுள்ளனர்.

இந்தக் கடற்கொந்தளிப்பினால் வடக்கு - கிழக்கு பகுதிக் கரையோர மாவட்டங்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை. மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் மட்டும் ஏழாயிரத்துக்கும் குறையாதோர் உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிப் பகுதி கிராமங்கள் கடற்கொந்தளிப்பால் பேரழிவு!

(வடமராட்சி)

நாட்டின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதி கரையோரங்களைத் தாக்கிய கடற்கொந்தளிப்பில் வடமராட்சிப் பகுதியிலும் பெரும் சேதங்கள் ஏற்பட்டன.

நேற்றுக்காலை 10 மணியளவில் பெரும் இரைச்சலுடன் சுமார் 10 அடி உயரத்துக்கு எழும்பிய கடல் அலைகள், கரையோரக் குடியிருப்புக்கள், கட்டடங்களை அழித்ததுடன் கடலில் நிறுத்தப்பட்டிருந்த வள்ளங்கள், படகுகளை தூக்கி வீசின.

வீடுகளுக்குள் புகுந்த கடல் நீரால் பலர் அடித்துச் செல்லப்பட்டதுடன் பெருமளவானோர் காயமடைந்தனர்.

தொண்டமனாறு முதல் மணற்காடு வரையான கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட பேரழிவால் சுமார் 100 பேர்வரை உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மேலும் பலரைக் காணவில்யையெனத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று மாலை வரை 64 சடலங்கள் பருத்தித்துறை வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டுள்ளன. நூற்றுக் கணக்கான பொதுமக்கள் காயமடைந்து பல்வேறு வைத்தியசாலைகளிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சியில் சுமார் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மட்டக்களப்பிலும் உயிரிழப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற கடற்கொந்தளிப்பால் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதுடன், பலர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு வரை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் 450 சடலங்களும், வாழைச்சேனை வைத்தியசாலையில் 115 சடலங்களும் வைக்கப்பட்டுள்ளன. காத்தான்குடியில் 55 முஸ்லிம்களின் சடலங்கள் நேற்று அடக்கம் செய்யப்பட்டன.

இந்த கடற்கொந்தளிப்பால் இடம்பெயர்ந்த மக்கள் மட்டக்களப்பு நகரிலுள்ள பாடசாலைகள், வந்தாறுமூலைப் பல்கலைக்கழகம், காத்தான்குடியிலுள்ள முஸ்லிம் பாடசாலைகள், பள்ளிவாசல்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலைக்குச் சென்ற 20 பேரை காணவில்லை

கீரிமலைக்கு பிதிர்க்கடன் செலுத்துவதற்காகச் சென்ற 20 பேரைக் காணவில்லையெனவும், இவர்களில் 6 பேரின் உடல்கள் பின்னர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

நேற்றுக்காலை 10.15 மணியளவில் பாரிய கடற் கொந்தளிப்பு ஏற்பட்டவேளை சேந்தாங்குளம் சந்தி வரை சுமார் இரண்டு பனை அளவு உயரத்திற்கு நீர் அள்ளி வீசப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மல்லாகம் பகுதியைச் சேர்ந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்குப் பகுதியில் 500 பேர் வரை உயிரிழந்தனர்!

வடமராட்சி கிழக்குப் பகுதயில் நேற்றுக் காலை இடம்பெற்ற கடறகொந்தளிப்பினால் சுமார் 500 பேர்வரை உயிரிழந்திருப்பதாக அங்கிருந்து பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

சுமார் 7 அடி உயரத்திற்கு எழுந்த கடல் அலை வடமராட்சி கிழக்கு கிராமங்களுக்குள் புகுந்து கொண்டதால் வீடுகளுக்குள் இருந்த மக்கள் பெருமளவில் உயிரிழந்தனர். மேலும் பலர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

பெருஞ் சத்தத்துடன் வீடுகளுக்குள் புகுந்த வெள்ளம் சுமார் 10 நிமிடங்களுக்குள் வழிந்தோடிவிட்டபோதும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தோர் காயமடைந்தோரை மீட்கும் பணிகள் நேற்று மாலைவரை பூர்த்தியாகவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்கொந்தளிப்பில் சிக்கி திருமலையில் 1033பேர்பலி

(திருகோணமலை)

திருகோணமலையில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்புப் பேரழிவில் 1033 பேர் இறந்ததுடன் 1340 பேர் காணாமற் போயிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேசமயம் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறியுள்ளனர்.

நேற்றுக்காலை 9.15 மணி முதல் 9.20 வரையான 5 நிமிட இடைவேளைக்குள் திருகோணமலை மாவட்டத்தின் பெரும்பான்மையான பகுதிக்குள் கடல் நீர் உட்புகுந்தமையால் பாரிய உயிர் மற்றும் உடமை இழப்புக்கள் ஏற்பட்டன. திருமலை நகரத்தை அண்டிய பிரதேசங்களான துவரங்காடு, அலஸ்தோட்டம், செல்வநாயகபுரம், அன்புவழிபுரம், சல்லி, சாம்பற்தீவு, போன்ற பிரதேசங்களும், (12 ஆம் பக்கம் பார்க்க)

## 1500இற்கும் அதிகமானோர் அம்பாறை மாவட்டத்தில் பலி!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் நேற்றுக் காலை ஏற்பட்ட கடற் கொந்தளிப்பால் சுமார் 30 கிராமங்கள் முற்றாக அழிவடைந்ததுடன் 1500 இற்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

நேற்றுக்காலை 8மணிக்கும் 9 மணிக்கும் இடையே பெருக்கெடுத்த கடல்- கிராமங்களுக்குள் வேகமாக உட்புகுந்து பெரும் அழிவுகளை ஏற்படுத்தியது.

வீடுகள் மற்றும் கட்டடங்களை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரத்துக்கும் அதிகமானோரை முல்லைத்தீவுக்கடல் காவுகொண்டது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரையோரப் பகுதியில் நேற்று இடம்பெற்ற கடற்கொந்தளிப்பில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நேற்றுமாலை வரை 650 க்கும் மேற்பட்ட சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த கடற்கொந்தளிப்பால் முல்லைத்தீவு கரையோரப் பகுதிகள் பாரிய அழிவைச் சந்தித்துள்ளன.

நேற்று மாலைவரை புதுக்குடியிருப்பில் 150 சடலங்களும், முள்ளியவளையில் 250 சடலங்களும் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை முல்லைத்தீவிலுள்ள செந்தளிர் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த 170 சிறுவர்களுள் ஒரு சிலரே உயிர்தப்பியுள்ளனர்.

கடல் கொர் [illegible]ளித்து வந்த வேகத்தில் அடித்துச் செல்லப்பட்ட மக்கள் கட்டடங்களிலும் மரங்களிலும் மோதி (12 ஆம் பக்கம் பார்க்க)

# இயற்கையின் சீற்றத்துக்கு இரையானோர் - காயமடைந்தோர் - இடம்பெயர்ந்தோர்...





















# வடமராட்சியில் இடம்பெற்ற பேரழிவுக் காட்சிகள்...



















# மற்றொரு கடற் கொந்தளிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதாம்!

## வளிமண்டலத் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

நாட்டில் மற்றுமொரு கடல் கொந்தளிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாக வளிமண்டலத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் நாட்டின் கிழக்குப் பகுதியிலுள்ள மக்களை அவதானத்துடன் இருக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

அந்தமான் தீவு, சுமாத்திரா தீவு, நிக்கோபார் தீவு ஆகிய பகுதிகளில் பூமி அதிர்வு ஏற்பட்டது. இந்தப் பகுதியில் ஏற்பட்ட நில நடுக்கத்தின் தாக்கமே இலங்கையில் சில பகுதிகளில் நேற்று உணரப்பட்டதாக வளிமண்டலத் திணைக்கள ஆய்வாளர் எஸ்.பிரேமலால் தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள கடற் கொந்தளிப்பு தற்காலிகமாகக் குறைந்து காணப்பட்டாலும், மீண்டும் கடற்கொந்தளிப்புக்கான வாய்ப்பு இருப்பதால் மக்கள் கரையோரப பகுதியில் இருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களில் இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த வருடத்தில் உலகைத் தாக்கிய மிக மோசமான பூமி அதிர்ச்சி இது என்பதால், கடல் கொந்தளித்ததாக வளிமண்டலத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கை நேரப்படி 6.58 அளவில் வட சுமாத்திரா தீவுக்கருகில் சுமார் 6.2 கடல் மைல் தூரத்தில் இந்தப் பூமி அதிர்ச்சி ஏற்பட்டதாக வளிமண்டலத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ரிக்டர் அளவில் இது 8.9 அளவாகும். இதேவேளை, இந்து சமுத்திரத்தின் கிழக்குப் பகுதியில் சில இடங்களில் நில நடுக்கம் ஏற்பட்டதாகவும் வளிமண்டலத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சாதாரணமாக 5.3 ரிக்டருக்கு அதிகமான அலகு நிலநடுக்கமாகக் கருதப்படுவதோடு, 6.3 ரிக்டர் அளவு பூமி அதிர்ச்சியாகக் கருதப்படுகிறது.

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம். (குளிரூட்டப்பட்டது)
மம்முட்டி, நந்திதாதாஸ் நடித்த **விஷ்வதுளசி**
காட்சி நேரம் 10.30 (பு.நே) மட்டும்
இன்றுமட்டும் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் 17 வது நினைவுதினத்தை முன்னிட்டு M.G.R (இருவேடம்), லதா, மஞ்சுளா நடித்த (ரீல்ஸ்)
**உலகம் சுற்றும் வாலிபன்**
காட்சி நேரம் - 2.30,9.30, 6.30 (பு.நே)

**நிரஞ்சனாஸ்** சங்கானை
தனுஷ், தியா நடித்த
**ட்ரீம்ஸ்** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
THE MUMMY RETURNS

**நாகம்ஸ்** சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான அர்ஜுன் (இருவேடம்), சாயாசிங், லைலா, வடிவேல் நடித்த



**ஜெய் சூர்யா**
கா.நே 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)
முற்பதிவுகளுக்கு நாகம்ஸ் சினிமா, யாழ்.பெயின் காடின் - 326, K.K.S.றோட் யாழ்ப்பாணம்

**ராஜா** யாழ்ப்பாணம்.
ரசிகப் பெருமக்களுக்கு எமது நத்தார் வாழ்த்துக்கள்
அர்ஜுன், ரீமாசென், வடிவேல், தேவயானி, பிரகாஸ்ராஜ்
**கிரி** (ரீல்ஸ்)
(இயக்கம் சுந்தர்C)
புதிய நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

கையிருப்பைக் குறைக்கும் நோக்குடன்
**மலிவு விற்பனை**
05/= தொடக்கம் 50/= வரையில் புத்தகங்கள்

| அப்பியாசப் புத்தகங்கள் | விலை |
|---|---|
| 1 கட்டு | 4.75 |
| 2 கட்டு | 9.25 |
| 3 கட்டு | 13.75 |
| 4 கட்டு | 18.25 |
| 5 கட்டு | 22.50 |

றிச்சாட், அந்திவானப் பதிப்பகங்களின் அப்பியாசப் புத்தகங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.2225542
(C/3500)

**NEW SCIENCE HALL**
2007 A/L
**கணித உயிரியல் பிரிவு**
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம் 27.12.2004
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்
C/3513

# 300 கைதிகள் தப்பினர்

மாத்தறை மாவட்டத்திலுள்ள சிறைச்சாலையிலும் கடல் நீர் உட்புகுந்து சேதங்களை ஏற்படுத்தியுள்ள நிலையில் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 300 கைதிகள் தப்பிச்சென்றுவிட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை இந்த சிறைச்சாலைக்குள் கடல்நீர் புகுந்ததனால் சிறைக்கூடம் பலத்த சேதமடைந்துள்ளது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே கைதிகள் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலையிலுள்ள மற்றைய கைதிகள், சிறையின் மற்றொரு பகுதிக்குள் மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஒத்திவைப்பு

சமாதானத்தை வலியுறுத்தி யாழ்ப்பாணம் - நல்லூர் கோட்டப் பகுதியில் அடுத்தவாரம் நடத்தப்படவிருந்த மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றையதினம் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தை அடுத்தே இந்த மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## அவசர கலந்துரையாடல்

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு சேகரிப்பது தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறை நடேசர் அரங்கில் நடைபெறவிருப்பதனால் அனைத்து வருட நுண்கலைத்துறை மாணவர்களையும் தவறாது ஒன்று கூடுமாறு இராமநாதன் நுண்கலைத்துறை மாணவர் சமூகம் கேட்டுள்ளது.

**றோணியோ இயந்திரம் விற்பனைக்கு**
நல்ல நிலையிலுள்ள Super Fax 350 மொடல் றோணியோ இயந்திரம் மற்றும் புதிய ஒலிம்பியா ஆங்கில தட்டச்சு இயந்திரம் (28'') விற்பனைக் குண்டு.
தொடர்பு:- சு மருதம்
66, மணிக்கூட்டு கோபுர வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம்.

**சிறு விளம்பரம்**
**வாகனம் விற்பனைக்கு**
டொல்பின் வான் (56 XXX) Full seats, New Engine, A/C, Radio set மற்றும் MD 90 மோட்டார் சைக்கிள் (GC XX) விற்பனைக்குண்டு.
சுவக்கின்பிள்ளை, 4 ம் கட்டை, ஆனைக்கோட்டை, 222 3679, 0776 639736, 0112714135

YEAR END SPECIAL OFFER
COMPUTER LANGUAGE & ACCOUNTING
ஆண்டிறுதி சிறப்புச் சலுகை
SELECT ANY COURSE PAY 3,900/- ONLY
Diploma in MS Office (MSO)
Diploma in Desktop Publishing (DTP)
Diploma in Computer Studies (DICS)
Diploma in Web Design (DWD)
Diploma in Computer Programming (DCP)
Diploma in Computerised Accounting (DCA)



மேலதிக விபரங்களுக்கும், இலவச ஆலோசனைகளுக்கும்
ASIAN COMPUTER SYSTEMS
2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆ 021-222 5677
108, K.K.S.வீதி,சுன்னாகம் (Jet Motors மேல் மாடி) ✆ 071-2501589
கொடிகாமம் வீதி நெல்லியடி. (கரவெட்டி தபாலகத்துக்கு முன்பாக) ✆ 077-3122198
கணனி கல்லூரி கிளிநொச்சி.

# முக்கிய அறிவித்தல்

வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 2004.12.30 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பரந்தனில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயல்கத்தில் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதினால், மீளாய்வு செய்யப்பட்டு உறுப்புரிமை பெற்றுள்ள அனைத்து உரிமையாளர்களையும், நெறியாளர் குழு உறுப்பினர்களையும் தவறாது இப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## நிகழ்ச்சி நிரல்

01. பொதுச்சுடர் ஏற்றல்
02. கொடி ஏற்றல்
03. அகவணக்கம்
04. தலைவர் தலைமையுரை
05. உதவி ஆணையாளர் உரை
06. புதிய முதலீடுகளுக்கான அங்கீகாரம்
07. புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு
08. சிறப்புரை
09. ஏனைய விடயங்கள்
10. நன்றியுரை

தலைவர்
கி. பாஸ்கரன்
வ. பி. பா. ஊ. உ. கூ. சங்கம்
பரந்தன் / கிளிநொச்சி

செயலாளர்
க. சி. மணியம்
வ. பி. பா. ஊ. உ. கூ. சங்கம்
பரந்தன் / கிளிநொச்சி

(C/2895)

பொதுசன நூலகம்

# பெரும்பாலான அதிபர், ஆசிரியரிடையே வாசிப்புத்திறன் குறைவடைந்துவருகிறது

## உதவிக் கல்விப் பணிப்பாளர் அனந்தராஜ்

(வடமராட்சி)

பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புத்தறன் தற்போது குறைந்து வருவதால் மாணவர்களின் ஆக்கத்திறன் வெளிப்பாடும், கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளும் குறைந்து வருகின்றது.

இதனால் மாணவர்களின் கல்வித்தரம் குறைவடைந்துள்ளது. ஒவ்வொரு பாடசாலை அதிபர்களும் ஆரம்பக் கல்வி மாணவர்களின் மொழிவிருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்துவதனூடாக ஆற்றல் மிக்க மாணவ சமுதாயத்தைக் கட்டியெழுப்பமுடியும்.

தற்போது மாணவர் மத்தியில் மட்டுமன்றி, பெரும்பாலான ஆசிரியர்கள், அதிபர்களிடையேயும் வாசிப்புத்திறன் குறைந்து வருவதையும் காணமுடிகிறது.

இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்மொழிப் பிரிவின் உதவிக் கல்விப்பணிப்பாளர் என். அனந்தராஜ் தெரிவித்தார்.

தரம் 4 வகுப்பில் நூல் அடிப்படையிலான மொழிவளப்படுத்தல் தொடர்பான முதற்கட்டப் பயிற்சியை வடமராட்சி ஆசிரிய மத்திய நிலையத்தில் ஆரம்பித்துவைத்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண பொப்லெப்பின் மேற்பார்வையாளர் ஏ.ஆர்.மைக்கல், வடக்குப் பிராந்திய மேற்பார்வையாளர் எஸ்.நகுலேஸ்வரன், கிழக்குப் பிராந்திய மேற்பார்வையாளர் ஜி.கந்ததாஸ் ஆகியோரால் கடந்த வாரம் நடத்தப்பட்ட இந்தச் செயலமர்வில் இணைப்பாளர் என்.அனந்தராஜ் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் -

வாசிப்புத்திறன் குறைவடைந்ததால் புதியதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பக்கூடிய ஆற்றல் உள்ளவர்களாகச் செயலாற்ற முடியாதுள்ளது. இத்தகைய குறைபாடுகளை நீக்கும் முகமாகவே ஆரம்பப்பிரிவு மாணவர்களின் மொழிவிருத்தியை மேம்படுத்தும் முகமாக வாசிப்புத் துணை நூல்களை வழங்கி அவற்றைக் கற்பிப்பதற்கான விசேட பயிற்சிகளையும் வழங்கி வருகின்றோம்.

இதன் முதற்கட்டமாகவே நூல் அடிப்படையிலான மொழிவளப் படுத்தல் செயற்திட்டம் என்பனவும், மேலும் 'பொப்லெப்' செயற்திட்டத்தைத் தரம் நாலாம் மாணவர்களிடையே நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

இதற்காக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 825 பாடசாலைகள் பொப்லெப் திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்தப் பாடசாலைகளுக்குப் பெருமளவில் வாசிப்புத்துணை நூல்களும் உபகரணங்களும் வழங்கப்படுகின்றன. இவற்றை முழுமையாகப் பாடசாலைகளில் செயற்படுத்துவதற்காக பாடசாலை அதிபர்களுக்குரிய பயிற்சிகளும், சிலவகையான செயலட்டைகள், ஆக்கத்திறன் விருத்தி நூல் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான வசதிகளைத்தர உள்ளீட்டு நிதியினூடாகப் பெருமளவில் பணமும் வழங்கப்படுகிறது.

இந்தச் செயற்திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் படாத பாடசாலைகளும், சிறப்புப் பயிற்சிக்காக ஆசிரியர்ளை அனுப்பிவைக்காத பாடசாலைகளிலிருந்தும் இந்தச் செயற்த்திட்டத்திற்காக வழங்கப்பட்ட பெருமளவு நூல்கள் மீளப்பெறப்பட்டு, அவை வேறு பாடசாலைக்கு மாற்றிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டு வருகிறோம்.

மேலும் இந்தச் செயலமர்வில் கலந்துகொள்ளாத பாட ஆசிரியர்களுக்கான இருநாள் பயிற்சிகள் திருகோணமலையில் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (12)



அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், SGBV, UNHCR, Forut மற்றும் HUDEC, HRC ஆகியோர் இணைந்து பிரதேச செயலர் பிரிவுதோறும் விழிப்புணர்வு மற்றும் கொடி வாரத்தைச் சிறப்பாக முன்னெடுத்தனர்.

இதில் சுகாதார வைத்திய அதிகாரி, பொது சுகாதார பரிசோதகர் ஆகியோரும் கருத்துரை வழங்கிச் சிறப்பித்தனர்.

# டைனமற் வெடிமருந்து மூலம் மீன் பிடிப்பதற்குத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மன்னார் கடற்பகுதியில் கடல் வளங்களைப் பாதுகாக்கும் முகமாக, டைனமற் வெடிமருந்து பாவித்து மீன் பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளதெனவும், அதனை மீறி டைனமற் வெடிமருந்து பாவித்து மீன்பிடியில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என, துண்டுப் பிரசுரம் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அறிவித்துள்ளனர்.

இது உடனடியாக அமுலுக்கு வருவதாகவும், இந்தத் தொழிலில் ஈடுபடுவோர், டைனமற் வெடிமருந்து மூலம் பிடிக்கப்படும் மீன்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வியாபாரிகள் ஆகியோர் கடும் தண்டனைக்கு உள்ளாக்கப் படுவார்கள் என, யாழ்.மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் அருணன் மாஸ்ரர் தெரிவித்தார். (21)

## தென்மராட்சி பிரதேசத்தில்

# சமுர்த்தி நிவாரணத்திட்டம் ஜனவரி மாதம் நடைமுறைக்கு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் சமுர்த்தி நிவாரணத்திட்டம் ஜனவரி மாதம் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது.

இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்துவதற்கான அறிவுறுத்தல் கூட்டங்கள் இன்றுமுதல் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தப் பிரதேச செயலகத்தின் கீழுள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளையும், 5 பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டு கூட்டங்கள் நடாத்தப்படவுள்ளன.

இன்று கைதடிப் பகுதியிலும், நாளை சாவகச்சேரிப் பிரிவிலும், நாளை மறுதினம் கொடிகாமம் பிரிவிலும், 30 ஆம் திகதி ஏனைய பிரிவுக்கும் கூட்டங்கள் நடைபெற வுள்ளன. (44)

### வீடமைப்புக்கடன் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்

2005 ஆம் ஆண்டுக்கான வீடமைப்பு அதிகார சபையால் வீடமைபபுக் கடன் பெறுவதற்கான விணணப் படிவங்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமைபுரியும் வீடமைப்பு அதிகார சபை உத்தியோகத்தரிடம் ஜனவரி 5 ஆம் திகதிக்கு பின்னர் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, வீடமைப்புக் கடன் பெறுபவர்கள் மேற்படி படிவங்களை ஜனவரி ஐந்தாம் திகதிக்கு பினனர் பெற்றுக்கொள்ளமுடியும். (29)

### அறக்கொடை நிலையக் கண்காட்சி பிற்போடப்பட்டுள்ளது

தியாகி அறக்கொடை நிறுவனத்தால் இன்று காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடத்தப்படவிருந்த தையல் கண்காட்சியும், விற்பனையும், அங்குரார்ப்பண வைபவமும் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறக்கொடை நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

### பிரதேச் செயலகத்தில் வலதுகுறைந்தோர் தினம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சர்வதேச வலது குறைந்தோர் தினம் எதிர்வரும் 30 ஆம் திகதி மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில், தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் கலந்து கொள்ள வுள்ளார். (25)

### பற்சிகிச்சை நிலைய திறப்புவிழா நாளை

சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையில் அமைக்கப்பட்டுள்ள பற்சிகிச்சை நிலையத் திறப்பு விழா நாளை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் க. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் - பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டொக்டர் இ.தெய்வேந்திரம் பிரதம விருந்திரனராகக் கலந்துகொண்டு நிலையத்தைத் திறந்துவைப்பார்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள வுள்ளார். (24)





அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி வாரத்தையொட்டி நல்லூர் பிரதேச சபையினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சி நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை பேராசிரியர் கா.கோபாலன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் -

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா நாடாவை வெட்டி கண் காட்சி நூலகத்தை ஆரம்பித்து வைப்பதையும் படத்தில் காணலாம். (63)

# கிழக்கின் வெள்ள அனர்த்தத்திற்கு வடக்கு உறவுகளின் உதவிப்பயணம்

கிழக்கிலங்கையில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக உணவு, உடை மற்றும் மருந்துப் பொருட்கள் சேகரிப்பில் ஈடுபட்டுவந்த தொண்டர்களைத் தொடர்ந்தும் அந்தப் பணியில் ஈடுபடும்படியும், நாளை இங்கிருந்து வாகன தொடரணி புறப்படவுள்ளதால் -

சேகரிக்கப்பட்ட பொருட்களை எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை 6 மணிக்கு பிரதான வீதி மடத்தடியிலுள்ள யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் ஒப்படைத்து உதவுமாறும் இந்தத் திட்ட ஒருங்கிணைப்புக் குழுவினர் கேட்டுக்கொள்கின்றனர்.

# பருத்தித்துறை நகர்ப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு நிலவுகின்றது

பருத்தித்துறை நகர்ப்பகுதி பெரும் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்நோக்கிவருகிறது. பருத்தித்துறை வீதியிலும், நகரிலும் ஆங்காங்கே காணப்படும் குழிகளில் வெள்ளம் தேங்கிக் காணப்படுவதாலும், சுகாதாரச சீர்கேட்டை ஏற்படுத்துகிறது.

அத்துடன் பருத்தித்துறை நகர் வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்து குன்றும், குழியுமாகக் காணப்படுவதால் வீதியால் பயணஞ்செய்யும் மக்கள் மிகச் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (14)

# சமுர்த்தி நலன்புரித் திட்டங்கள் தொடர்பான விண்ணப்பங்களை பூரணப்படுத்த பயிற்சி!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள சமுர்த்தி நலன்புரித் திட்டங்கள் தொடர்பான சமுர்த்தித் தரவு சேகரிக்கும் விண்ணப்பப் படிவங்கள் பூரணப்படுத்தப் படவுள்ளன.

இது சம்பந்தமான 3 நாள் பயிற்சி வகுப்பு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சி வகுப்பில் சமுர்த்தி திட்டம், சமுர்த்தி விண்ணப்பப் படிவங்கள் பூரணபபடுத்தல் தொடர்பான பயிற்சி அளிக்கப்படும்.

இந்தப் பயிற்சி வகுப்பு எதிர்வரும் ஜனவரி மாதம் 30, 31 ஆம் திகதிகளில் 3 பிரிவுகளாக இடம் பெறவுள்ளது. இதனடிப்படையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் 28 கிராம அலுவலர் பிரிவுகளையும் 3 பிரிவுகளாகப் பிரித்து பயிற்சியளிக்கப்படும். இந்தப் பயிற்சி வகுப்புக்களில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், கணக்கெடுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக வங்கி நிதியுதவியுடன் புதிய திட்டம்

யுத்தத்தின் காரணமாக வீடுகளை இழந்த வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்கள் மீளவும் தமது வீடுகளைக் கட்டுவதற்கு நிதி உதவி வழங்கும் முகமாக உலக வங்கியின் உதவியுடன் வடக்கு - கிழக்கு மாகாண சபையினாலும் மாவட்ட அரசாங்க அதிபர்களினாலும் இந்தத் திட்டம் 2005-2008 வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்தகையவர்கள் வீடுகள் கட்டுவதற்குக் கட்டட விண்ணப்பப் படிவங்களை வழங்கி உள்ளூராட்சி மன்றங்களை விரைவாக உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் விஜயலட்சுமி சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தெரிவித்துள்ளார். (29)




# தமிழ் நிலாவைத் தேடி...

செல்வி பத்மநாதன்

சிறுகதை

மனிதன் தன் கனவுகளை, நினைவுகளை விடும் ஒருபொழுது தூக்கம். விழித்துக்கொண்டால் நினைவுகள் துளிர்த்துவிடும். கனவுகளைப் பகிரமுடியாத கம்பியூட்டர் மனிதர் நினைவுகளைத் தெளிக்க முடியாத இடநெரிசல். உறவுகளுக்கே அர்த்தம் கிடைக்காத லண்டன் மாநகரத்திலே ஆறுவருட வாழ்க்கை. நம் எதிர்கால வாழ்க்கையின் காட்சிகளை வரிகளாக்கி வரும் தமிழ்நிலாவின் கடிதம் முதல் மூன்று வருடத்தையும் வசந்தமாக்கியவை. அது நின்றுபோனதால் பிள்ளையள் மூன்று பேரும் பாலைவனமாகிப் போனவை. என் காதலைத் தவிர்த்து விடக்கூடியவள் அவளல்ல. ஏதோ ஒரு சூழ்நிலையால் அவள் மடல் நின்றுபோனது. எனக்குள் உறுதியான நம்பிக்கை. தாய்நாடு மீண்டு அவளை அவளாகவே காணுவேன். அந்த நம்பிக்கையில் இன்று தாய் மண்ணில் தூக்கம்.

பல்கலைக்கழக வாழ்வினில் என் நினைவுகளோடுகூட இருந்தவள். அவளை அழகு நிலா என்று சொல்லலாம். அதற்காக நிறத்தில் சந்திரன், கூந்தலில் கருமேகம் அவ்வாறெல்லாம் அவளை வர்ணிக்க இடமில்லை. ஆனால்... ஏதோவொரு அழகு அவளிடமிருக்கிறது. தமிழ்மொழியைப் பிரதான பாடமாகக் கற்றுக்கொண்டிருந்தவள். மருத்துவபீட மாணவனாகக் கற்றுக்கொண்டிருந்த எனது துறைக்கும், அவளது துறைக்கும் எந்தவித தொடர்புமில்லை. இவ்வாறு இருக்கவே நான் அவளோடு நட்புக்கொண்டேன் என்றால், உண்மையில் ஏதோ ஒன்று அவளிடமிருக்கிறது. எங்கையோ இருந்த என்னை அவளிடம் இழுத்திருக்கின்றது.

என் நிலாவைப்பற்றி அறிந்திட சைக்கிளை எடுத்துக்கொண்டு வீதியில் இறங்கினேன். இறந்தகால நிகழ்வுகள் எனக்குள் ஓடிக்கொண்டிருக்கையில், நண்பன் சங்கரின் வீட்டுக்கு முன்நின்று பெல் அடித்தேன். கேற்றைத் திறந்த அவன் முகத்தில் மின்னல் பளிச்சிட "ரமேஸ்... வாடா... வா... எப்பையடா வந்தனீ? என்ன திடீரென்று...?" "சும்மாதான்..." "இல்லை நீ சும்மா வந்திருக்கமாட்டா... கல்யாணமாக்கும். எப்ப கல்யாணம்? கல்யாணப் பொண்ணு நிலா எப்பிடி இருக்கிறா...?" வந்த வினாக்களால் துவண்டுபோய் அவனைப் பார்த்தேன். "நான் வந்ததே நிலாவைப்பற்றி அறியத்தான்..." "என்னடா சொல்றா... ஏன் நிலா எங்க?" "என்ன நடந்தது எண்டு எனக்குத்தெரியாது முதல் தொடர்ந்து கடிதம் வந்தது. இப்ப மூன்று வருடமாய் வரேல்லை..." "மூன்று வருடத்துக்கு முதல்தான் நானும் கண்டிருக்கிறன். உன்னைப்பற்றித்தான் கதைச்சிட்டுப்போவாள். இடப்பெயர்வுக்குப்பிறகு நானும் நிலாவைக் காணேல்ல. உனக்குத்தான் இருக்கிற இடத்தை அறிவிச்சிருப்பாள் எண்டு நினைச்சன்..." "இடப்பெயர்வுக்குப் பிறகுதான் எனக்கும் கடிதம் வராமவிட்டது. அவள் இருந்தது வாடகை வீடுதானே. அங்க இப்ப வேற யாரோதான் இருக்கினம்." அது சரி... சூரியும், கரனும் என்ன செய்யிறாங்கள்...? "எங்கட நாட்டு நிலைமை... உனக்குத் தெரியும்தானே. அதிலை சூரி இயக்கத்தில இருக்கிறான். கரன் வெளிநாடு போட்டான். ரமேஸ்... ஒரு ஐடியா நீ சூரியைப் பார்க்க வன்னிக்குப் போவாய்தானே. இடம்பெயர்ந்த சனமும் கனக்க வன்னியிலதான் இருக்கு. அதனாலை சூரியைப் பார்த்திட்டு நிலாவைப்பற்றியும் அவளிட்ட விசாரிச்சுப் பாப்பம்..." தீர்மானம் முடிவாகிப் போனதால் இருவரும் வன்னிக்குப் புறப்பட்டனர்.

உறவினர் வீட்டில் தங்கிநின்றுகொண்டு, அவர்களின் உதவியுடன் பெரிய பதவியிலிருந்த சூரியை ஒருவாறு சந்தித்துக்கொண்டு "இந்தப் பெரிய பதவியில இருக்கிறா. எங்களைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்குவியோ... தெரியாதெண்டு நினைச்சன்... ஆனா... நீ... அப்ப இருந்த சூரியாகத்தான் இப்பவும்..." "ரமேஸ்... எங் களுக்குத் தரப்படுகிற பதவி பெருமைக்கும் புகழுக்குமில்லை. தமிழ் மக்களை எந்தளவுதூரம் காப்பாற்ற வேண்டும் என்கிறதை உணர்த்துகிற பதவி. அதாவது எங்களுக்குத் தரப்படுகின்ற கடமை. இதிலை பெருமை கொள்றதுக்கு என்ன இருக்கு? சரி அதைவிடு. பழைய நட்பை மறக்காமல் தேடி வந்திருக்கிறியே... அதுதான் பெருந்தன்மை. சரி வாங்கோ... இப்படியே நடந்துகொண்டு பழைய காலத்தையெல்லாம் மீட்டுப் பார்ப்பம்..." அப்படியே சிறிதுதூரம் நடந்து சென்று ஒரு முகாமுக்குக் கூட்டிக்கொண்டு போனான்.

இடத்தைப் பார்த்துவிட்டு இருவரும் சூரியைப் பார்க்க "என்னடா... பொம்பிளைப் புலி நிற்கிற இடமா இருக்கு... இஞ்சை யேன் எங்களைக் கூட்டிக்கொண்டு வந்தனீ. அதுதானே அதிசயமாயப் பார்க்கிறியள். எங்கட பெண் புலிகளை வெளிநாட்டுக்காரன் ரமேஸ் பார்க்கவேணும். அதுதான் கூட்டிக்கொண்டு வந்தனான். வாங்கோ... இதுதான் ஆட்களைச் சந்திக்கிற அறை..." என ஒரு அறைக்குள் கூட்டிக்கொண்டு சென்றான்.

கறுப்புக் கண்ணாடியுடன் வரிப்புலியென உடையணிந்து, வீரப்பெண்ணாக ஒரு பெண் பத்திரிகை பார்த்துக்கொண்டிருந்தாள். மூவரும் எதிரே கதிரையில் அமர, அந்த நிமிடம் பத்திரிகையை எடுக்காமலே "சூரியா..." ம்... நான்தான்" "சுடரொளி - நீர் வரப்போறீர் எண்டு இப்பத்தான் சொல்லீற்றுப் போகுது. நீரும் வாறீர்..." பத்திரிகையைப் பக்கத்தில் வைத்தாள். பட்ட கிளையில் பட்டென்று பூக்கள் மலர்ந்தமாதிரி உள்ளம் சிலிர்த்துப் போனான் ரமேஸ். சங்கருக்கோ அதிர்ச்சி. இருவர் முகத்தையும் நேரே பார்த்தவள் எந்தப் பாவத்தையும் முகத்தில் வெளிப்படுத்தவில்லை. "என்ன சூரி... அண்ணை முக்கிய மெசேச் பற்றிக் கதைச்சிருக்கிறார்போல- என்ன மெசேச்...?

"இல்லை... நான் அதுக்கு வரேல்லை... சும்மா நண்பன் எண்ட முறையில பாத்திட்டுப் போவம் எண்டு வந்தனான்..." "அதிசயமாக இருக்கு... போராட்டத்துக்கெண்டு வந்தாப்பிறகு ரெண்டுபேரும் எத்தனையோ முறை சந்திச்சிருக்கிறம். அப்பவெல்லாம் எங்கட பழைய காலத்தைப் பற்றி நானோ அல்லது நீயோ கதைக்கேல்ல... இண்டைக்கு...? மலர்ந்த மலர்க்கிளைக்கு சுடுநீர் விடப்பட்ட உணர்வோடு "சூரி... நீ கதைச்சிட்டுவா நாங்கள் போயிற்று வாறம்..." சங்கரின் கையைப் பிடித்திழுத்தபடி எழுந்தான் ரமேஸ். "ஐஞ்சு நிமிசம்... எனக்காக இருங்கோ... நானும் வாறன்" முரண்டு கொண்டிருந்த மூவரையும் மீண்டும் நேருக்கு நேர் பார்த்தாள்.

"தமிழ்... என்னோட ரெண்டுபேர் வந்திருக்கினம்..." "ம்... தெரி..." அவைக்கு எப்பிடித் தெரியும்? அதுசரி... சூரி இப்பத்தானே நீ சொன்னனீ. எந்தப் பெரிய பதவி கிடைச்சாலும், நாங்கள் பெருமைகொள்ள மாட்டம். கடமையாத்தான் நினைப்பம் எண்டு. அப்ப இந்தத் தமிழ்...? வெளிநாட்டால வந்தவுடன் சொந்தக்காரர் எல்லாம் தேடி வந்தாங்கள். எனக்குச் சந்தோஷம் வரேல்ல. என்ர சொந்தம் எங்கே எண்டு தேடி அலைஞ்சன். ஆனா..." "ரமேஸ்... ஸ் என்னடா நீ...?" பெயர் அவள் காதில்விழ உள்ளம் அந்தக் கணம் துள்ளியெழத் தன்னையுமறியாமல் கண்ணாடியைக் கழற்றினாள். கோபத்துடன் அவளையே பார்த்திருந்த ரமேஸ் பிஞ்சுக் குழந்தையின் கையில் நெருப்புத் துண்டம் விழுந்ததுபோல துடித்துப் போனான். வார்த்தைகள் வெளியே வரமறுத்து, அவனுக்குள் செத்துப்போனது. பார்வையிழந்த கண்களோடு பார்த்தாள். ரமேஸின் தமிழ் நிலா. அந்தப் பார்வையில்லாத விழிகளைக் கூடச் சந்திக்கத் தரணியற்று தலையைக் குனிந்தான். கண்கள் குளமாகின. தமிழ் நிலா இப்போ விடுதலைப்புலி தமிழ்தானே? ஒரு சில நிமிடங்களிலேயே தன்னை நிதானப்படுத்திக்கொண்டவளாக "பானு... வந்திருக்கிறது. என்ர... இல்லை உங்களோட படிச்ச ரமேஸ்தானே..." பெண்மை உணர்வுகள் அவளை மூடிக்கொள்ள வார்த்தைகள் முண்டியடித்தன. "ஓம்... ரமேஸும் சங்கருந்தான் வந்திருக்கினம்." "ரமேஸின்... குரல் கொஞ்சம் மாறியிருக்கு அதுதான்... சரி சங்கர்... என்ன... பேசாமல் இருக்கிறீர்? ரமேஸ் பேச வேண்டியதையெல்லாம் பேசிட்டிது. உம்மட பங்குக்கு நீரும் ஏதாவது சொல்லுமன்..."

அந்த வார்த்தைகள்தான் ரமேஸுக்கு உயிர் கொடுத்ததோ என்னமோ "நிலா... Sorry. நீர் பேப்பரைப் பார்த்துக்கொண்டு இருந்தீர். அதுதான் எனக்கு..." "பார்த்துக் கொண்டு இருந்தனான். படிக்கேல்ல. அது ஒருஉத்தி ரமேஸ். பானுவோட யார் யார் வருவினம், எப்படி வருவினம் எண்டு எனக்குத் தெரியாது. அவைக்கெல்லாம்... ஏன் என்னோட இயலாமை தெரியவேணும்?"

"நிலா..." அவள் வார்த்தைகள் அவனை ஆட்கொள்ள எழுந்து, அவளுக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்தான். எதேச்சையாய் அவள் கால்கள் தட்டுப்பட திடுக்கிட்டு, இரண்டு கால்களையும் தொட்டுப் பார்த்தான். முழங்காலுக்குக்கீழே ஒரு கால் இல்லை. பொய்க்கால் பூட்டப்பட்டிருந்தது. மலர்ந்த மலர்கள் நெருப்புக்குள் வீழ்ந்ததுபோல சுருங்கிப் போனான். வெறுமையான பார்வையுடன் ஆழமாய் நோக்கினான். "ரமேஸ்... என்னடா?" "சங்கர் நிலான்ர கால்..." "சிங்களவன்ர ஆட்லரி கண்ணை மட்டும் கொண்டுபோகேல்ல காலையும்தான் கொண்டு போட்டுது ரமேஸ்..." இயல்பாய்க் கூறினாள் நிலா.

சூரியும் சங்கரும் வெளியேறினார்கள். அதிர்ச்சியில் உறைந்துபோயிருந்தான் ரமேஸ். "ரமேஸ்..." கைகளால் தடவிப் பார்த்தாள். "ரமேஸ்..." மீண்டும் குரல் கொடுத்தாள். ஒருநிலைப்பட்ட ரமேஸ் "இருக்கிறன் நிலா உம்மோட... உமக்குப் பக்கத்தில வெளி அழகைப் பார்த்து விரும்பியிருந்தா, உம்மட கடிதம் வராவிட்ட உடனேயே உம்மை மறந்திருப்பன். மனதைத் தான் விரும்பினனான். உம்மை விட்டுப்போக முடியாது நிலா..." கண்கள் குளமாக வார்த்தைகளில் தடுமாறினான். "ரமேஸ்... உம்மில நான் வைச்ச அன்பும் அதே மனதைப் பார்த்துத்தான்.

தமிழனும் தாய்நாடும் மிதிக்கப்படுது என்ர அப்பாவையும் அநியாயமாக பறிகொடுத்திட்டன். கோழையா இருக்க முடியேல்ல. அதுதான் இயக்கத்துக்கு வந்த னான். அதோடையே உமக்குக் கடிதம் போடாம விட்டிட்டன். ஆனா என்னோட... காதல் பொய்யில்லை... ரமேஸ் என்னுடைய அன்பால் இனி உமக்கும் என்ன பலன்" "அப்படிச் சொல்லாதையும் நிலா... இப்பவும் எப்பவும் எனக்கு நீர்தான் வேணும். இந்த நாட்டுக்காக உம்முடைய கண்ணையும் காலையும் கொடுத்திட்டீர். இனிக் கொடுக்கிறதுக்கு உம்மட்ட ஒண்டுமே இல்லை. இனியெண்டாலும்... எனக்காக... என்னோட வந்திடும். என்னோட உயிரை நான் வாழவைப்பன்..."

"இல்லை ரமேஸ் இல்லை... நீர் சொல்லுறது பிழை இந்த நாட்டுக்குக் கொடுக்கிறதுக்கு என்னோட சிந்தனை இருக்கு. மனசு இருக்கு. ஏன் என்னோட கைகள் இருக்கு. நான் இழந்தது வெறும் கண்ணையும், காலையும்தான். எங்கட சகோதரர்கள் மிதிக்கப்படும்போது, மிதிப்பவனை மிதிக்கக் கால்கள் இல்லை... ஆனா தமிழன் மிதிக்கப்படுகிறானே. தடுத்து நிறுத்து என்று குரல் கொடுத்துத் தமிழர்களை விழிப்படைய வைக்கவாய் இருக்கு. பேச்சு வலிமை இருக்கு. எனக்கு இது போதாதா ரமேஸ்" வினாத்தொடுத்து நிறுத்தினாள். பதிலுக்கான சத்தம் இல்லை. "ரமேஸ்... தடவிப் பார்ததாள்" இதுவரை தனக்குள்ளேயே பேதலித்துப்போயிருந்த "ரமேஸ்... தடவிப் பார்த்தான்" இதுவரை தனக்குள்ளேயே பேதலித்துப்போயிருந்த ரமேஸ் அவள் கரங்களை இறுகப் பற்றினான். "நிலா... அப்ப ஒருநாள்... இரவு ஏதோ கனவு கண்டு பயந்து போய் விடிய முதல்வேலையா என்னை வந்து பார்த்து, என்னைப் பிடிச்சுக்கொண்டு நீர் அழுதனீர். தொட்டால் வாடிப்போகும் மலர் போன்ற நிலா. அந்த நிலா இண்டைக்கு தாய் நாட்டுக்காகக் கண்ணை இழந்து, காலை இழந்து எதையுமே இழக்காதமாதிரி இன்னும் இழக்கிறதுக்கு இருக்கு எண்டு சொல்லிநிற்குது. அந்தளவுக்கு உம்மட மனசு வலிமை பெற்றிருக்குதெண்டால் தமிழ் மக்கள் எந்தளவுக்குக் கொடுமைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள் என்று புரியுது. இப்பிடி நிற்கிற உம்மைப்பார்க்க எனக்கு வெட்கமா இருக்கு. இந்தத் தாய்நாட்டுக்காக, மொழிக்காக நான் என்ன செய்தன்? இந்த இழப்பை நான் எப்படி ஈடுசெய்வன். நிலா... வாழப் போகிற நாட்களில் ஒவ்வொரு நிமிடமும் தாய்நாட்டுக்காக, தமிழ்மொழிக்காக வாழ வேணும்... முடியுமா...?

"முடியும் ரமேஸ்... முடியும். நானே என்னோட சிந்தனை பேச்சு இவைகளை நம்பி இந்த நாட்டுக்காக வாழவில்லையா? அப்



## காதலிக்கோர் கவிதை



என்னைச் சந்திலும்
இதுக்கமான கம்பிக்கூடு
முன்புறம் தூக்காமலேயே
சிறுசிறுக்கு உதிரம் சொட்டுகிறது.
முண்டாந் தடிகள் முதுகுகளினில்
சீழ் பிடித்திருக்கும் என் சரீரம்
நெருங்குகிறது தன் இறுதி நாளை நோக்கி
மனிதக் குருதி எந்நேரமும் காய்ந்து கிடக்கும்
பாதணிகளும்
மானுட எல்லை கடந்த குரூர விழிகளுமாய்
அலைந்து திரியும் காவலர்கள்
இந்நுமா உடல் எச்சமிக்கும்
இந்தத் தீவின் எங்கோவோர் மூலையில்
என் தாயின் கருப்பையில் காணத்தவறிய
இருளை நாள்தோறும் காணும் பேறு பெற்ற
ஓர் சித்திரவதைச் சிறைக் கூடத்தில்
கிடக்கிறேன் என்பது மட்டும்
இப்போதைக்கு எனக்குத் தெரிந்த ஒரே உண்மை.

என்னுயிர் சகி.....
ஒரே அன்புடையோமாய்
நாம் நேரெதிர்பட்ட
சந்திக்க நேர்ந்திருந்த அந்த முதல் நாளை
எப்போதாவது எண்ணிப் பார்க்கையில்
மக்கிப் போன மனவெளியிலிருந்து
உற்பவிக்கிறது நாளெல்லாம் கவிதைகள்.
உணர்ச்சிப் பிரவாகத்தில் முகிழ்ந்த
ஓர் நிலா நாளில்
உன்னிடமிருந்து பெற்றுக்கொண்ட
இதழொற்றின் ஞாபகச் சிதறல்களை
இற்றைக்கான என் காயங்களுக்கு
ஒத்தடமாக்குகையில்
மாபெரும் இதக்கலில்
என்னியம் வலுப்பெறும் வாடை
நாசிகள் முழுதும் நிறைந்து மணக்கிறது.

கலங்காதிரு சகியே.....
அன்றைய நாட்களில்
அடைக்கும் இதழ் புதல்வன் என்னை
ஓர் விழிப்பாளையெனும் ஏதேயொரு
பனித்துளிகளல்
உறை நிலைக்கு உட்படுத்தியவளன்றோ நீ.

விருட்சங்கள் தளை ஆணி வேர்களை
அனுப் புதைக்கும் நீ தேடிவரு
தந்தைக்குரிய ஆயுள் நாட்களின்
நிமிடங்களை நியாயப்படுத்துதானே.
நம்பிக்கைத் துளிகள் சில
இன்றைக்கும் எனக்குள் இருக்கின்றன.

வந்துவிடுவேன்
கட்டறுந்த உன் கருங் குழலின்
கடைசிக் கூந்தலோனும்
வெளிச்சக் கம்பியால் மின்னிப் போவதற்குள்
நிச்சயம் வந்து விடுவேன்.

வேல்.லவன்

## பயணம்!



அலை பரப்பி கரை தொடும் கடலைப்போல் எமது வாழ்வும் பரந்த வானவெளியில் கைவிரித்து எல்லையை தொடமுடியும் என்ற நம்பிக்கையில் பயணம் செய்கின்றோம்.

தனிப் பயணத்துக்கு பாதையும் இல்லை. இருப்பிடமும் இல்லாத போதுதான் நாம் ஒன்றானோம். பயணத்துக்காக உருவாக்கப்பட்ட பாதையில் கடலும் வானமும் இணைந்துகொண்ட போதுதான் நாம் பிரிந்துசென்றோம்.

வாழ்ந்த ஊரினால் மட்டும் நினைவூட்டப்படுகிறது. என்று எவரேனும் நினைப்பதில்லை. ஞாபகப்படுத்தும் போது வித்தியாசப் படாமல் புதிதாகப் பார்த்த ஞாபகம் எங்கேயோ சென்று வருகின்ற இடங்களில் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நிறையப்பேரை பார்க்கின்றபோதும்....

சென்றுவருகிற இடங்களில் ஒரேநேரம் வந்துசேர்ந்தாலும் சில நாட்களில், வேளைக்கு வந்துவிட்டதுபோல் தோன்றுகிற போதும், சில நாட்களில் பிந்திவந்து விட்டதுபோல் தோன்றுகிறபோதும்தான் பயணம் தொடர்கிறது.

வேடிக்கை பார்ப்பவனுக்குதன்னை அடையாளப்படுத்த முடியவில்லை. அடையாளப்பட்டவனுக்கு வேடிக்கை பிடிக்கின்றபோது வேடிக்கையாக இருக்கிற பயணத்தில் தான் சலிப்பு இருக்காது.

கலகலப்பு அமைதி, விளையாட்டுத்தனம், குழப்படி என்று மாணவனாக இன்றும் இருக்கிறபோதுதான் வாழ்க்கைப் பயணத்தில் நிறையப்படிக்க வேண்டி இருக்கிறது.

திரும்பும் ஒவ்வொரு தடவையும் யாரோ ஒருவர் பின்னால் வருவது அல்லது தொடுவதுபோல் ஒரு உணர்வில் திரும்பிப் பார்க்கின்ற போது என்னை நோக்கி நிறையப் பேர் நடந்து வருகிறார்கள். தெரு ஓரமாக நின்று பார்த்தபோது என்னைத் தாண்டிச் செல்கின்றார்கள். வழிப்பயணத்தில் முன்னேயும் பின்னேயும் மாறிமாறி செல்கின்றபோது தான் பயணிக்க வேண்டும்போல் இருக்கிறது.

நூலகத்தில் நுழைந்து கொண்டு எதை எடுப்பது, எதை விடுவது என்று தெரிவு செய்து கொண்டிருக்கிறபோது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று பிடிக்கிற படியால் தான் அனைத்தும் தெரிவு செய்யப்படுகிறது. பயணிப்பில் அனைத்து பாதையும் பயனுள்ளதாகத்தான் அமைகிறது. கால்கள் நடக்கின்றவரை.

அடையாள அட்டை இல்லாமல் ஒரு இடமும் போகமுடியர்தபோது என்னை இதுவரை அடையாளப்படுத்தவில்லை என்ற உணர்வே மேலெழ வைக்கிறது. எங்கே போகின்றாய்? எங்கிருந்து வருகிறாய்? என்ன செய்கிறாய்? என்று கேட்கும் கேள்விகளில் எனக்கான பயணம் கேள்விக் குறியாக வுள்ளது.

ஒரு பக்கம் துணிந்த போராட்டத்தில் இணைந்து போராடப் பயந்து, மறுபக்கம் எதிரிக்குப் பயந்திருக்கும்போது, போராளி நீதான் என்று பிடித்துக்கொண்டு சிறையில் அடைத்து பெருமைப்படும் எதிரிக்கு பாதை, வழி இதனூடான பயணம் எதுவும் தெரியாதபோது, எமது இடத்தை இவர்களூடே தேடமுடியாமல் போய் விடுகிறது.

கடல்வழிப்பயணத்தில் படகின் ஓட்டத்தில் பிரிந்து, பின்பு சேரும் கடல் நீரும் எங்களுக்கு வழிவிட்டுத்தான் வாழ்கிறது. அடர்ந்த காடும், படர்ந்த முள்ளும் தரைவழிப்பயணத்தில் எங்களுக்கு வழிவிட்டுத்தான் வாழ்கிறது என்றபோது அன்றாட பயணப்பாதையின் குறுக்கே எதிரி அரண் அமைத்தும், முட்கம்பி வேலி அடைத்தும் உட்புகமுடியாது என்று சொல்லும் எதிரியின் பார்வைக்கு எதிரே தான் விடுதலைக்கான பயணம் தொடவேண்டியதாகவுள்ளது.

செல்வா

பிடியிருக்க உமக்கு கண், கால், கை, கல்வி திறமை என்று எல்லாமே இருக்கு. எந்தக் கடமையையும் செய்ய உம்மால் முடியும்."

"நிலா... நீர் சொல்றமாதிரித் தமிழனுக்காக ஏதாவது செய்ய என்னால முடியும். அது மட்டுமல்ல உமக்கு இதுவரை கண்ணும், காலும் இல்லாம இருந்திருக்கலாம். இனி மேல் உம்மோட கண்ணாக... காலாக... நான் இருப்பன். தமிழன் விடிவுக்காக எதை நீர் பார்க்கவேணும் என்று ஆசைப்படுகிறீரோ... அதை நான் பார்த்துத் தருவன். தமிழ் மொழியின் உயர்வுக்காக எங்க நீர் போகவேணுமோ அங்க உம்மைக் கொண்டு சேர்ப்பன். அதுமட்டுமல்ல நிலா... என்னைபோல இருண்டுபோயிருக்கிற மனங்களை ஒளிக்குக்கொண்டுவர உம்மைப் போல தமிழ் நிலாக்கள் இந்த மண்ணில உருவாக வேண்டும்..."

"ரமேஸ்..." அன்பு வெள்ளம் அவளை அமிழ்த்துவிட, அவள் கரங்களை இன்னம் இறுக்கமாகப் பற்றினாள். அப்போது வெளியிலேயே நின்றிருந்த சங்கரும், பானுவும் உள்ளே வந்தபடி "சபாஸ் நிலா ரமேஸ் சொல்றது உண்மையிலும் உண்மை. இந்தத் தமிழ்ப் பெண்கள் எல்லாம் தமிழ் நிலாக்களாக மாறவேணும். ரமேஸை மட்டுமல்ல இந்தச் சங்கரைப்போல இருக்கிற மனிதரை எல்லாம் தமிழன் நிலையை அறியவைத்து தமிழன் கைகளையும் பலப்படுத்த வேண்டும். நானும் இந்தக் கைகளோட பல கைகளை இணையவைப்பன்" கூறியபடி சூரியின் கரத்தைப் பற்றினான். "தமிழ்... நீர் உணர்ச்சிவசப்படுறீரோ... இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால், நான் உணர்ச்சிவசப்படுறன். ஆடோணும்போல இருக்கு, பாடோணும்போல இருக்கு... என்னுடைய நண்பர்கள் எல்லாம் சேர்ந்து தாய் நாட்டுக்காக வாழப்போறதை நினைச்சா..."

"சூரி கடிக்காதையும்... நீர் உணர்ச்சி வசப்படேக்க எனக்கு அந்த உணர்ச்சி இல்லையா? இருக்கு. ஆனா என்னால ஆட முடியாது. பாடமுடியும். இப்ப பாடினா புலிகளுக்கு ஒப்பாரி வைக்கத் தெரியாதே. இது யாராக இருக்கும் எண்டு தலைவர்முதல் எல்லாரும் ஓடிவருவினம். அது தேவையா... சூரி..." பாவியாய்க் கேட்க மூவரும் கை கொட்டி வாய்விட்டுச் சிரிக்கிறார்கள். இந்தச் சிரிப்பில் ஒருநாள் எம் தேசம் விடியும். ●

## குட்டிக் கதை



## அசலும் நகலும்

கவிஞன் ஒருவனைக் கவிதைக் கடலென்று ஊரார் சொன்னார்கள். அவரது பாடல்கள் ஒவ்வொரு இதயத்தையும் தேனிலே நனைத்தெடுத்தன. அவர் வீட்டுக்குப் பக்கத்திலிருந்த ஒருவன் இதனைக் கவனித்தான். நாமும், ஏன் பாட்டெழுதிப் பெயர் வாங்கக் கூடாது என்று எண்ணினான்.

ஏடெடுத்தான் எழுதினான், எழுதியெழுதிக் குவித்தான். தனக்குத்தான் படித்து மகிழ்ந்தான். ஒருவரும் அவன் பாட்டைப் பாட்டென்று ஏற்றுக்கொள்ளவில்லை.

அவனுக்கு கவலை வந்தது.

ஒரு சமயம் அவன் இருந்த ஊருக்கு ஞானி ஒருவர் வந்தார். அவனும் அவரைப் போய்ப்பார்த்தான்.

ஞானதேவா! என் பக்கத்து வீட்டுக்காரன் பாட்டெழுதுகிறான். எல்லோரும் அவன் பாட்டைக் கொண்டாடுகிறார்கள். நானும் பாட்டெழுதுகிறேன். ஒருவரும் படிக்க மாட்டேனென்கிறார்கள். என்ன காரணம்? என்று கேட்டான்.

ஞானி இதைச் சொன்னார். ஒரு ஊரில் மீன் பிடிப்பவன் ஒருவன் இருந்தான் தினமும் அவன் மீன் பிடிக்கும்போது ஏராளமான மீன்கள் அவனுக்கு அகப்படுவதுண்டு. இதைப் பார்த்த மற்றொருவன் தானும் மீன் பிடிக்க கிளம்பினான்.

அவன் வைத்திருப்பது போலவே தூண்டிலொன்று வாங்கினான். அதே மாதிரியே முள்ளொன்று வாங்கினான். அதே மாதிரியே இரையும் தயார் செய்து கொண்டான். அவனுடைய உடுப்புகளைப் போலவே உடுப்புகளும் வாங்கிக் கொண்டான்.

அவன் உட்காருகிற இடத்துக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்துகொண்டான்.

ஆனால் பாவம் ஒரு மீன் கூட அவனுடைய தூண்டிலில் விழவில்லை!

பல நாள் முயன்று பார்த்துவிட்டு, ஒரு நாள் அவன் என்னிடம் வந்தான்.

அவனைப்போலவே தூண்டில், அவனைப்போலவே எல்லாம், ஆனால் எனக்கேன் மீன் கிடைக்கவில்லை? என்று கேட்டான்.

அவனுக்கு நான் இந்தப் பதிலைச் சொன்னேன். அவன் வாங்கியதைப் போலவே தூண்டில் வாங்கினாய், அவன் வைத்திருப்பது போலவே எல்லாப் பொருட்களும் வாங்கினாய். ஆனால் ஒன்று மட்டும் இல்லை நீ அவனல்ல!

பாட்டெழுத முயன்றவன் அமைதியடைந்தான்.

– கவிஞர் கண்ணதாசன்

## தேடலும் பகிர்தலும்




மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசாரப்பேரவையின் வருடாந்த வெளியீடு தேனகம்! இம்முறை பன்னிரண்டாவது ஆண்டு முத்தமிழ் விழாச் சிறப்பு மலராக வந்துள்ளது. இளம் இலக்கியவாதி த.மலர்ச்செல்வன் அதன் ஆசிரியர்.

கட்டுரைகள் யாவும் தென் தமிழீழத்தின் சரித்திர பண்பாட்டு அம்சங்களின் பல் பரிமாணங்களை நோக்கும் முயற்சியில் எழுந்தவை. அந்நோக்கில் அவை வெற்றியும் பெறுகின்றன.

இவற்றுள் சமகால கலை இலக்கியப் பிரக்ஞை கொண்டோரின் கவனத்தை ஈர்ப்பதில் முதன்மை பெறுவது, ஆறுகள் பின்னோக்கிப் பாய்கின்றன என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள ஒரு கருத்துத் தொகுப்பு. எப்போது, எங்கே எத்தொடர்பில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது என்பது குறிப்பிடப்படாவிடினும், உளச் சமநிலையும், உண்மை வேட்கையும், சுயசிந்தனையும் கொண்ட இளம் இலக்கியவாதிகளின் எண்ண ஓட்டங்களை எடுத்துக்காட்டும் அலசல் – மேலே குறிப்பிட்ட பண்புகளைக் கொண்ட எந்த ஒரு இலக்கியகாரனுடைய உள்ளத்திலும் இயல்பாய் எழ நேர்ந்த இந்த வினாக்களை இவர்கள் உரத்துச் சிந்தித்திருக்கிறார்கள் என்பது மிக ஆரோக்கியமானது. இந்த யதார்த்தத்தை வைத்துப் பார்க்கையில் மட்டக்களப்பைத் தாம் பொறாமைக் கண்ணோட்டத்துடனேயே நோக்க வேண்டியுமுள்ளது. ஏனெனில் இன்றைய யாழ்ப்பாணத்து இலக்கியச் சூழலில், தம்மை சீரியஸ் இலக்கியகாரர்களாகப் பாவலராகக் காட்டுபவர்களிடையே இத்தகைய உளத் துணிவும், ஆரோக்கியமும் உள்ளதா என்பது கேள்விக்குரியது.

ஆத்மா, செ.யோகராசா, கிக்கோ, வாசுதேவன், விமல் குழந்தை வேல். அம்ரிதா ஏயெம், ரஷ்மி மணிசேகரன் தில்லை, மலர்செல்வன், திசேரா ஆகியோர் பங்களிப்புச் செய்துள்ள இந்த வரங்கின் கருத்துப் பரிமாறல்கள் அதிலும் குறிப்பாக– ஆத்மா, மலர்ச்செல்வன், விமல், குழந்தை வேல் வாசுதேவன் போன்றோரின் குமுறல்கள் புரிந்துகொள்ளப்படக் கூடியவையே. இலக்கிய வியாபாரம் அது எந்த 'லேபலில்' நடந்தாலும் ஏற்றுக்கொள்ளப் பட முடியாதது என்ற அவர்களின் பிரகடனம் மெய்யான படைப்பாற்றல் வாய்ந்தோர்க்கு மட்டுமேயுரிய சத்திய வேட்கையின் வெளிப்பாடு என்றே படுகிறது.

தமிழிலக்கியத்தையும் சர்வதேச வர்த்தகப் பொருளாக்கி, தன்னை ஒரு பல்தேசியக் கம்பனிபோல் நிறுவமுனையும் இலக்கிய அமைப்புடன் தம்மை இனங்காட்டி, தம் இருப்பையும் நிறுவமுயல்வோர்க்கு இந்த இளைஞர்களின் நேர்மைத் திறனைச் சிலசமயம் புரிந்துகொள்ள முடிந்தாலும் நிச்சயமாக அதை ஒப்புக்கொள்ளுந் திராணி மட்டும் இருக்காது.

இவற்றுக்கு சற்று அப்பால் மலர்ச்செல்வன் குறிப்பிட்ட இன்னொன்றையும் இங்கு சுட்டலாம். 'அடையாளங்களை வைத்துக்கொண்டு இப்படித்தான் சிறுகதை, நாவல், கவிதை இருக்கவேண்டும் என்ற வேலி எங்களிடம் இருக்கிறது. இதனால் தான் எங்களிடம் மீறல்கள் அதிகமாக ஏற்படவில்லை.'

-சாந்தன்.

# வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் கல்வியை முன்னெடுப்பதில் சிரமம்

வவுனியா தெற்கு வலயத்தில் கல்வி நிலைகளை சரியான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு பாரிய பிரச்சினையாக ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதாக வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி ஒஸ்போல் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு கல்வி வலயத்தில் போரால் அழிவுற்றுள்ள பாடசாலைகள் தற்போது புனரமைக்கப்படுகின்ற போதும், இந்தப் பிரதேசத்தின் கல்வி நிலை மிகவும் கவலைக்குரியதாக இருப்பதாக வவுனியா வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் தண்டாயுதபாணி தெரிவித்தார்.

இந்தக் கல்வி வலயத்துக்கு 705 ஆசிரியர்கள் தேவையான போதும், இங்கு 411 ஆசிரியர்கள் மட்டுமே பணியில் இருப்பதாகவும், இன்னும் 294 ஆசிரியர்களுக்கு வெற்றிடம் இருப்பதாகவும், மேலும் கடந்த கால போர் காரணமாக பாதிப்புக்குள்ளாகியுள்ள மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்த முடியாத நிலையிலும், போசாக்கில்லமாலும், அடிபபடைப் பிரச்சினைகளாலும் உளவியல் தாக்கங்களுக்கும் உள்ளான நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த வலயத்தில் ஆங்கிலக் கல்வியின் நிலை மிகவும் மோசமான நிலையில் இருப்பதாகவும், தற்போது ஆங்கில கல்வியல் தேவை மிகவும் முக்கியமானதாக இருக்கின்ற போதிலும், ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாகவே இந்த நிலை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு வலயத்தில் 89 பாடசாலைகள் இருக்கின்ற போதும், நிரந்தரமான ஆங்கில ஆசிரியர்கள் 05 பேர் மட்டுமே தற்போது சேவையாற்றி வருகின்றனர். கடந்த காலப் பெறுபேற்றை வைத்து பார்க்கின்ற போது 1.3 வீதமான மாணவர்கள் மட்டுமே ஆங்கில மொழியில் சித்தி எய்தி இருக்கிறார்கள். எனவே இந்த நிலையை கருத்திற்கொண்டு ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறையை தவிர்ப்பது மிகவும் அவசியமானதாக இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.



## போட்டிகளில் பங்குபற்ற தடை

கிளிநொச்சி உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகம் 24-12-2004 தொடக்கம் மூன்று வருடங்களுக்கு எந்தவித போட்டியிலும் பங்குபற்ற முடியாது என்பதோடு, எந்தவித போட்டிகளும் கழகம் சார்பிலே நடத்த முடியாது என்று தமிழீழ விளையாட்டுத் துறையினர் தெரிவித்தனர்.

23-12-2004 அன்று நடைபெற்ற மென்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் கழக வீரர்கள், அந்தக் கழக ஆதரவாளர்கள் நடந்துகொண்ட முறைகேடான காரணத்தால் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## திட்டமிடல் அலுவலருக்கான இரண்டாம் கட்டப் பயிற்சிநெறி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் திட்டமிடல் அலுவலர்களுக்கான இரண்டாம் கட்டப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

போரூட் நிறுவனத்தின் கீழ் உள்ள மனிதவள அபிவிருத்திப் பிரிவினரால், இந்த மாவட்ட திட்டமிடல் அலுவலர்களுக்கான செயற்திறன் மதிப்பீடு செய்வதற்கான இரண்டாம் கட்டப் பயிற்சிநெறி எதிர்வரும் ஜனவரி 3,4,5 ஆம் திகதிகளில் கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெறவுள்ளது என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

## வெள்ளத்தால் நலன்புரி நிலையங்களில் தங்கிய மக்களுக்கு மருத்துவ வசதிகள் எதுவுமில்லை

முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டு, சுதந்திரபுரம், விசுவமடு ஆகிய பிரதேசங்களில் 300 குடும்பங்களைச் சேர்ந்த 1180 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, நலனபுரி நிலையங்களில் தங்கியிருந்த பின்னர் வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

குரவில்வயல் பாடசாலையில் 38 குடும்பங்களைச் சேர்ந்த 124 பேரும், விசுவமடு மகா வித்தியாலயத்தில் 134 குடும்பங்களைச் சேர்ந்த 655 பேரும், ரெட்பானா புனித இராயப்பர் தேவாலயத்தில் 5 குடும்பங்களைச் சோந்த 22 பேரும், வேராவில் அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் 73 குடும்பங்களைச் சேர்ந்த 308 பேரும் தங்கியிருந்தனர்.

இதேவேளை கண்டாவளை நலன்புரி நிலையத்தில் 126 குடும்பங்களைச் சேர்ந்த 440 பேரும், முருகானந்தா மகாவித்தியாலயத்தில் 33 குடும்பங்களைச் சேர்ந்த 80 பேரும், நாகேந்திரபுரப் பிரதேசத்தைச் சேர்ந்த 93 குடும்பங்களைச் சேர்ந்த 360 பேரும் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்து திரும்பியுள்ளனர்.

நலன்புரி நிலையங்களில் இவ்வாறு தங்கியிருக்கும் மக்கள் தற்போது பல்வேறு நோய்களுக்குள்ளாகி வருவதாகவும், இவர்களுக்கான முறையான மருத்துவ வசதிகள் இதுவரையில் ஏற்படுத்தப்படவில்லை என தெரிய வருகிறது.

## இராணுவத்தால் 370 வீடுகள் அழிப்பு

மன்னார் - அடம்பன் பிரதேசத்தில் இராணுவத்தால் 370 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதி முதல் 1999 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் இராணுவத்தின் எறிகணைவீச்சு, விமானக்குண்டு வீச்சு என்பவற்றின்மூலம் 480 கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 370 வீடுகளும், ஏனையவை அரச தனியார் கட்டடங்கள் போன்றவையாகும்.

## போரூட் நிறுவனத்தால் பழமரக்கன்றுகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் - மாங்குளம் பகுதி மக்களுக்கு போரூட் நிதித்திட்டத்தின் கீழ் பழமரக்கன்றுகள், நீர் இறைக்கும் இயந்திரம், தையல் இயந்திரம் என்பன வழங்கப்பட்டுள்ளன.

மாங்குளம், மணவாளன்பட்டமுறிப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு பயன்தரு பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இவற்றைவிட இரண்டு குடும்பங்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும், அத்துடன் கரிப்பட்டமுறிப்பு கிராமத்தில் ஆறு குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

## உவர்நீர் தடுப்பு அணை அமைக்கப்படவில்லை

(மன்னார்)

மன்னார் - மூன்றாம்பட்டிக் கிராமத்தில் உவர்நீர் தடுப்பு அணை இதுவரையில் அமைக்கப்படவில்லை.

இந்தக் கிராமத்தில் கடல்நீர் உட்புகுவதை தடுக்கும் வகையில், உவர்நீர் தடுப்பு அணை அமைப்பதற்கு யு.என்.டி.பி. நிறுவனம் எட்டு லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. எனினும் நீர்த் தடுப்பு அணை அமைக்க வேண்டிய பகுதிகளில் பொதுமக்கள் அத்துமீறி குடியேறியுளளமையால் அணைத்தடுப்பை அமைக்க முடியாதுள்ளது.

## வவுனியா மாவட்ட நகரசபையால் கூட்டெரு தயாரிக்க நடவடிக்கை

(வவுனியா)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வவுனியா நகரசபை மட்டுமே கூட்டெரு தயாரிக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தி வருகிறது. வவுனியா வேப்பங்குளம் கூட்டெரு தயாரிக்கும் நிலையமானது நகர கழிவு அகற்றலில் முக்கிய பங்கு வகிக்கின்றது என, வவுனியா நகரசபையின் செயலாளர் எம்.என்.சரவணபவா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கூட்டெருவானது முழுக்க முழுக்க சேதப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுவதனால். எந்த விதமான இரசாயனக் கலப்பும் இல்லை. மக்களிடம் இதுபற்றிய போதிய விழிப்புணர்ச்சி இல்லாததால் தயாரிக்கப்படும் கூட்டெருவை சந்தைப்படுத்த முடியாத பெரும சிரமமான நிலை ஏற்பட்டுள்ளது.

கூட்டெரு தயாரிக்கப்படுவதால் எங்களுக்கு பெரியதொரு சுமை குறைக்கப்பட்டுள்ளது. இதனால் இறுதி கழிவு அகற்றலுக்குச் செல்லும் கழிவுகளுடைய தொகையை குறைக்கக் கூடியதாக அமைந்துள்ளது.

நிலையத்தில் கழிவுகளை பதப்படுத்துவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட தொழிலாளர்களை மட்டுமே ஈடுபடுத்தியுள்ளோம். நகரத்தில் சேகரிக்கப்படும் முழுக் கழிவுகளையும் நாங்கள் இந்த நிலையத்துக்கு எடுத்துச் செல்வதில்லை. அதற்குப் பல காரணங்கள் உள்ளது. கூட்டெரு தயாரிக்கப்படும் நிலையத்தில் பரப்பளவு குறைந்த இடவசதிகளே உள்ளன. போதிய கொள்கலன்கள் இல்லை. மரக்கட்டைகளை உடைக்கக் கூடிய இயந்திர வசதிகள் இல்லை. ஆனாலும் நிலையத்தை மேலும் விஸ்தரிப்பதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் புதிய வைத்திய அதிகாரி நியமிக்கப்படவில்லை

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தால் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட வைததிய அதிகாரியின் ஒப்பந்த காலம் இந்த மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கான கடிதம் இவருக்கு வராததுடன், இவருக்குப் பதிலாக புதிய வைததிய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

ஆண், பெண் நோயாளர் தங்கி சிகிச்சை பெறும் விடுதி, மகப்பேற்று விடுதி, வெளிநோயாளர் பிரிவு என்பன இங்கு காணப்படுகின்றன. வைத்தியர் உவரும் நியமிக்கப்படாத நிலையில் இந்த வைத்தியசாலை புதுவருடத்துடன் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தப் பிரதேச மக்கள் வைத்திய சேவைகளைப் பெறுவதற்கு கிளிநொச்சி, சாவகச்சேரி, யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு செல்லும் நிலை ஏற்படக்கூடும் என தெரிய வருகிறது. (21)

## முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு நிகழ்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வானது கடந்த புதன்கிழமை காலை 10 மணிக்கு ஒட்டுசுட்டான் கமநல கேந்திர நிலையத்தில் முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கோகிலதாசன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை ஒட்டுசுட்டான் கோட்டப் பொறுப்பாளர் ஈழவன் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றிவைத்தார். ஈகச்சுடரை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து சிறப்புரையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் நிகழ்த்தினார்.

இதில் புதுக்குடியிருப்பு, துணுக்காய், உடையார்கட்டு, குமுழமுனை, ஒட்டுசுட்டான், பாண்டியன்குளம், முத்தையன்கட்டு, ஒலுமடு, முள்ளியவளை, அளம்பில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 50இற்கும் மேற்பட்ட விவசாயிகள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

## முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குளங்கள் புனரமைக்கவில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நியாப் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மூன்று குளங்கள் இதுவரையில் புனரமைக்கப்படாதுள்ளன.

2002, 2003 ஆம் ஆண்டு நியாப் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் 29 குளங்கள் புனரமைப்புச் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. எனினும் மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் உள்ள ஐயன்கன்குளம், பழைய முறிகண்டிக்குளம் ஆகிய குளங்களின் புனரமைப்பு பணிகள் இதுவரை முடிவடையவில்லை. இந்தக் குளங்களின் புனரமைப்புப் பணிகள் தாமதம் அடைந்தமைக்கு ஒப்பந்தக்காரர்களின் அசமந்தப் போக்கே காரணம் என இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

## வரட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை

(முல்லைத்தீவு)

கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன், கோணாவில், வன்னேரி ஆகிய பிரதேச மக்களுக்கான வரட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அக்கராயன், கோணாவில், வன்னேரி போன்ற பிரதேசங்களில் வரட்சி நிவாரணம் வழங்குவது என தெரிவித்து, பொது இடங்கள், வீதிகள் என்பன இந்தப் பகுதி மக்களால் புனரமைப்பு செய்யப்பட்டன.

ஆனால் இதுவரையும் இவர்களுக்கான நிவாரணம் வழங்கப்படவில்லை. இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்தப் பகுதிக்கான வரட்சி நிவாரணம் வழங்குவதற்குரிய நிதி போதாமல் உள்ளதாக தெரிவித்துள்ள நிலையில் இந்தப் பகுதி மக்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே*
*செல்வத்தை தேய்க்கும் படை.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## இயற்கை வெல்லலாம் ஆனால் மனிதம் தோற்கக் கூடாது...

இயற்கை இப்படியொரு கோரமான அனர்த்தத்தை விளைவிக்கும் என எவரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

இயற்கையின் இந்தச் சீற்றத்துக்கு காரணம் எதுவாக இருநதாலும், அதன் கோரக் குமுறல் ஏற்படுத்திய தாக்கங்களின் எதிரொலகளும், அதனால் ஏற்பட்டுள்ள பேரழிவுகளும், உயிரிழப்புகளும் மனித இதயங்களில் ஏற்படுத்தியுள்ள அதிர்ச்சியும், வேதனையும், வலியும் வார்த்தைகளால் எழுதமுடியாதனவாகும்.

சல நாட்களின் முன்னர்தான், தொடர் - அடர்மழை காரணமாக வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட இயற்கையின் அனர்த்தம் மக்களுக்கு ஏற்படுத்திய துன்ப துயரங்களில் இருந்து மீள்வதற்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் கடலன்னையின் சீற்றம மற்றொரு பேரழிவுக்கும் காரணமாகியுள்ளது.

இபபடியொரு அவலம் ஏற்படுமென எவரும் எதிர்பார்த்திருக்க முடியாத சூழலில் தன்னை நம்பியே வாழும மக்களை கடலனனையின் கோபம் காவுகொண்டுவிட்டதே...!

கொல்லப்பட்டவர்கள், கடலால் அள்ளுண்டு அடித்துச செல்லப்பட்டவர்கள், அங்கவீனமுற்று காயமுற்று அவலப்படுபவர்கள், உறவுகளை, உடமைகளை, உறைவிடங்களை பறிகொடுத்து திக்கற்று ஏதிலியராக நிற்பவர்கள் இந்தோனேஷியர்கள், தாய்லாந்துக்காரர், இந்தியர்கள், பங்களாதேஷ்காரர், இலங்கையர்கள் எவராய் இருந்தாலும் மனிதர்கள்....

-அவலத்திற்கும் துயரத்திற்கும் ஜாதி, மத, தேசிய - பேதமே கிடையாது.

-கண்ணீரின் நிறமும், இழப்பின் துயரமும் மரணத்தின் வலியும எல்லோருக்கும் ஒன்றே.

- இயற்கையின் சினமும், சீற்றமும் எல்லோரையும் ஈவிரக்கமின்றி ஒரேமாதிரியே பலிவாங்கியுள்ளது.

-கரை தழுவி கதைபேசிச் செல்லும் அலைகளுக்கு கரையோர மக்களைக் காவுகொள்ளும் வெறி ஏற்படக் காரணம் என்ன?

-அபபாவி மக்கள் அலையோடு ஒன்றாய் அலைந்து அலைநது அன்றாடம் வாழ்வோடு போராடும் மக்களுக்கு அலைகளே துரோகம் செய்துவிட்டதே.

- மருத்துவமனைகளில் கொண்டுவந்து அடுக்கப்பட்டுள்ள அந்தப் பிஞ்சுக் குழந்தைகளையும், சிறுவர்களையும் கடலம்மா இப்படி ஈவிரக்கமற்று தண்டித்துக்கொள்ள அவர்கள் செய்த பாவம்தான் என்ன?

-கடலை நேசித்ததும், அலைகளை ரசித்ததும் குற்றமா?

-கடற்கரையில் வந்தொதுங்கும் சடலங்கள் ஊடாக இயற்கை நமக்குக் கூறும் செய்திதான் என்ன?

மனித சக்திக்கு அப்பாற்பட்ட அனைத்தையும் மேலாதிக்கம் செய்யும் வலு தனக்கேயுரியது என உணர்த்தவா விரும்புகிறது?

- எதுவானாலும் பொங்கிக் கொந்தழித்தும் பிரவேசித்து கடல் நீரின் உப்பை விடவும், கரையோர மெங்கும இழப்புக்களின் வலிதாங்காது அலறி - கதறித் துடிக்கும் மக்களின் கண்ணீராய் உதிரும உப்பின் கனம் கனமானது... கரிப்பானது.

- இயற்கையால் எப்போதுமே சபிக்கப்பட்ட மண்ணாக இருக்கும கிழக்கு இந்தமுறையும் கடற கொந்தழிப்பால் மேலும் பழிவாங்கப்பட்டுள்ளது. வடக்கு கரையோரத்தை ஆழியின் ஆவேசக் குமுறல துவம்சம் செய்துள்ளது... தெற்கிலும், மக்களின் அவலம் அலையோசையை மிஞ்சிக் குமுறிக்கொண்டிருக்கிறது.

- திசைப் பறவைகள் யாவும் துயரச் செய்திகளையே சுமந்து வருகின்றன.

- இந்தச் சோகங்களிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களை மீண்டும இயல்பு வாழ்வுக்கு புத்துயிர்கொள்ள வைப்பது எப்படி?

இதுவே இப்போதுள்ள பாரிய பிரச்சினை.

சோகங்களைக் கருணையாலும், அநுதாபத்தாலும் நிரந்தரமாக நீக்கிவிடமுடியாது.

ஆனாலும், அவர்களை ஆறுதற்படுத்த அதுவும் தேவை.

அதற்குமேலும் மிக அவசியமாக அவர்களுக்குத் தேவையானவை அநேகம். அவர்களுக்கான அத்தியாவசிய நிவாரணப் பணிகள, சுகாதாரத் தேவைகள், வாழ்வாதார மூலங்கள், உடனடி வதிவிடங்கள்... எனப் பலதையும் கவனிக்கவேண்டியது ஏனைய மக்களின் பொறுப்பேயாகும்.

சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காதவாராக நாம் இருக்கலாமா?

அந்த மக்களுக்கு புதுவாழ்வளிக்க எழுவோம். எமது மனிதத்தை நாம் நிரூபிப்போம். இயற்கை அவர்களை அழித்தாலும், இயல்பு வாழ்வை அவர்களுக்கு மீள உருவாக்கிக் கொடுத்து நாம் அவர்கள் ஏதிலிகள் அல்ல என்பதை உணர்த்துவோம்.

அதேசமயம் -

இயற்கையின் சீற்றத்தால் இழப்புகளை பல வகையிலும் சுமந்து நிற்கும் மக்களுக்கு எமது ஆதரவையும் அனுதாபத்தையும் தெரிவிப்பதுடன், தம் இன்னுயிரை இழந்தோர்க்கு அஞ்சலியையும் செலுத்துகிறோம்.




## நாடும் நடப்பும்



இயற்கையின் கோரத்தாண்டவம்

# தென்பகுதியில் மட்டும் இரண்டாயிரம் பேர் பலி!

(கொழும்பு)

நாட்டின் தென்பகுதியில் கடற்கொந்தளிப்பினால் 2000 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளதாகவும் 1000 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்கொந்தளிப்புக் காரணமாக அம்பாந்தோட்டையில் 324 பேரும், மாத்தறை மாவட்டத்தில் 374 பேரும், தங்காலையில் இரு வெளிநாட்டவர்கள் உட்பட 110 பேரும் பாணந்துறையில் 30 பேரும், திஸ்ஸமகாராமவில் 42 பேரும், காலியில் 500 பேரும், களுத்துறையில் 15 பேரும், கல்கிசையில் 8 பேரும், நீர் கொழும்பில் ஒருவரும் பலியாகியுள்ளதாக நேற்றுமாலை கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இவற்றைவிட வேறு பல பிரதேசங்களில் ஏற்பட்ட உயிரிழப்புகள் தொடர்பான விபரங்கள் கிடைக்கவில்லை என்றும் அவைகள் கிடைக்கப் பெறும்பட்சத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிக்குமென பொலிஸார் தெரிவித்தனர்.

தென்பகுதியில் கடற்கரையை அண்மித்த பகுதி மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளவத்தை, தெஹிவளை, களனி மீனவர்களின் பல லட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் சேதமடைந்துள்ளன.

பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வடமராட்சிப் பகுதியில்

# 34 பொதுமக்களின் சடலங்கள் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டன!

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற பேரழிவின் போது உயிரிழந்தவர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலங்களில் 34 பேரின் சடலங்கள் நேற்று மாலை அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

ஏனைய சடலங்கள் இன்று காலை ஒப்படைக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த 34 பேரின் விபரம் வருமாறு.

கந்தசாமி - தேசிங்கராசா, தேசிங்கராசா - இளவரசி, ஜெயரூபன் - வனிதா, இராசு - அமராவதி, சந்திரதாஸ் - சர்மிளா, நாகரத்தினம் - சின்னாச்சி, செல்வன் - பிரபாகரன், சூரியமூர்த்தி-சிலோச்சனா, நந்தகுமார்-நவந்தன், கந்தவனம்-சிவக்கொழுந்து, செல்வராசா-இம்பிரான், செல்லத்துரை-கிளி, மரியகுபேந்திரா, லூசியன், அந்தோனிப்பிள்ளை - மலரல் பேட்.

தங்கவடிவேல்-மகாலக்ஷ்மி, கனகசபை-நாகமுத்து, மகாலிங்கம்-அம்மாகிளி, அந்தோனிப்பிள்ளை-அலோற்பவம், கந்தசாமி-ஆறுமுகன், அம்பிகாபதி-சூரியப்பிரகாசம், அகிலதாஸ்-கிரிஷாத், சிவநேசராசா-கிருஷ்ணப்பிரியன், சின்னத்துரை-மீனாட்சி, குணரத்தினம்-சரஸ்வதி, சிவகரன்-சுகிர்தா, இரத்தினவடிவேல்-அர்ச்சனா, ஆறுமுகம்-வள்ளிப்பிள்ளை, கந்தசாமி-இலட்சுமிஅம்மா, கந்தசாமி-தங்கலீலா, அம்பிகாவதி-இராஜேஸ்வரி, கனேந்திரன்-கலைவாணி, இருதயதாஸன்-அன்ரன்கனிஸ்ரன், இருதயதாஸன்-அன்ரன்ஜெனிஸ்ரன். (111,12,14)

# இந்திய கடற்படைக் கப்பல்கள் உதவிப்பொருட்களுடன் விரைவு

இலங்கை அரசின் அவசர வேண்டுகோளையடுத்து இந்தியா ஐந்து யுத்தக் கப்பல்களையும், உதவிப் பொருட்களையும் இலங்கைக்கு அனுப்பியுள்ளது.

கடற்படை அதிகாரி அட்மிரல் அருண் பிரகாஸின் நேரடிக் கண்காணிப்பில் இந்த ஐந்து கப்பல்களும் மும்பை, கொச்சின் மற்றும் விசாகப்பட்டினம் துறைமுகங்களிலிருந்து திருகோணமலை மற்றும் காலி துறைமுகங்களை நோக்கி வந்து கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த யுத்தக் கப்பல்களில் மீட்புப் பணிக்கான ஹெலிகள் மற்றும் படகுகளில் மருத்துவப் பொருட்களும் கொண்டு வரப்படுவதாக அட்மிரல் அருண் பிரகாஸ் தெரிவித்தார்.

இதேவேளை, ஜப்பானும் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிப்பணிகளை வழங்குவதற்காக தனது மீட்புக்குழுவை அனுப்பியுள்ளது.

தெற்குத் திசையினிலே... இந்திரஜித்

# அரசின் குறுகிய தந்திரோபாய நகர்வுகள் அதற்கு நெருக்கடிகளையே ஏற்படுத்தும்

இலங்கை அரசாங்கம் சர்வதேச மத்தியில் எதிர்பார்த்த மற்றும் ஒரு நற்சான்று அதற்குக் கிடைக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த, இடைக்கால நிர்வாக யோசனைக்குப் பதிலாக, இதுவரை காலமும் இழுவல் போக்கைக் கடைப்பிடித்து வந்த இலங்கை அரசாங்கம், அண்மையில் முதன்முறையாக அதன் யோசனையைத் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்திருந்தது.

முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியின்போது முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி யோசனையை அடிப்படையாகக்கொண்டு பேச்சுவார்த்தைக்குத் தாம் தயாரில்லை என்ற போக்கை இலங்கை அரசாங்கம் கடைப்பிடித்துவந்தது என்றாலும், சர்வதேசத்தின் சாதகப் பார்வை தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்புக்குச் செல்வதை உணர்ந்த இலங்கை அரசு, தமது காய்நகர்த்தலை இரண்டுகட்ட சாதக நிலைக்குப் பயன்படுத்த நினைத்தது. கடந்தவாரம் நோர்வே ஏற்பாட்டாளர் எரிக் சொல்ஹெய்மின் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைக்கான தமது பதிலின்மூலம், அரசாங்கம் இதனை சாதிக்க நினைத்தது. அதன்மூலம் ஒன்று சர்வதேசத்தின் முன்னால் தாம் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்பதை அது வலியுறுத்த நினைத்தது.

இரண்டாவதாகத் தமது அரசாங்கத்தின் பங்காளியான ஜே.வி.பியை திருப்திப்படுத்தும் நோக்கத்தை அது கொண்டிருந்தது. (இடைக்கால ஏற்பாடு குறித்துப் பேசலாம்) என்ற அரசாங்கத்தின் பதிலைப் பொறுத்தமட்டில் இடைக்கால நிர்வாகம் என்று நேரடியாகத் தெரிவித்தால், அது ஜே.வி.பியைக் கேள்விகேட்கச் செய்துவிடும் என ஜனாதிபதி தரப்பு கருதியது.

எனவே, அதன் தாக்கத்தை சற்றுக் குறைத்து இடைக்கால ஏற்பாடு குறித்துப் பேசலாம் எனத் தெரிவித்திருந்தது. இது பெரும்பாலும் ஜே.வி.பியைக் கேள்வி கேட்கச் செய்யும் பதிலல்ல என்பதே அரசாங்கத்தின் எண்ணமாகும். இடைக்கால நிர்வாகம் என்ற பேச்சுக்கே இடமில்லை எனக் கூறிவரும் ஜே.வி.பியைக் கொஞ்சக் காலத்துக்கு மயக்க நிலையில் சமாளிக்க இது உதவும் என்பதே இலங்கை அரசாங்கத்தின் கருதுகோளாக இருந்தது.



அதேநேரம் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி யோசனையை, இந்தியாவைத் தவிர ஏனைய சர்வதேச நாடுகள் நிராகரிக்கும் என எதிர்பார்த்த இலங்கை அரசாங்கம், அது நடக்காமல் போகவே தமது நிலைப்பாட்டை நெகிழச்செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானது.

அதன்படி அது நோர்வேயின் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடைக்கால ஏற்பாடுகள் குறித்துப் பேசலாம் என்ற யோசனையை முன்வைத்தது.

எனினும், இந்தப் பதிலானது சாதாரண மக்களைக் கூடத் திருப்திப்படுத்தும் பதிலல்ல என்பது இலங்கை அரசாங்கத்துக்குத் தெரியும். எனினும், ஏன் இத்தனை பெரிய யுத்தத்தைத் தம்முடன் நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் இந்தப் பதிலை அனுப்பிவைக்கவேண்டும்?

இங்கு அரசாங்கம் - தமது முந்திய நிலைப்பாடுகளை மையமாக வைத்துக்கொணடு தமிழீழ விடுதலைப் புலிகளை தமது சர்வதேச காய்நகர்த்தலுக்குள் ஈர்த்துவிடலாம் என நினைத்தே அரசாங்கம் இந்தப் பதிலை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்தது. இதன்மூலம் தமது யோசனையைத் தமிழீழ விடுதலைப் புலிகள் நிராகரிப்பர். எனவே, அதனை வைத்துக்கொண்டு தமது காய்நகர்த்தலை சிறிது காலத்துக்குக் கொண்டுசெல்லலாம் என்ற குறுகிய நோக்கமே அரசாங்கத்திடம் இருந்தது. ஆனால், அரசாங்கத்தின் பதில் தெளிவற்றது என்றும், அதில் எதுவும் புதிதல்ல எனவும் தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ள உத்தியோகபூர்வ பதிலின்மூலம் அரசாங்கம் மேலும் ஒரு சுமைக்கு ஆட்பட்டுள்ளது.

***இங்கு அரசாங்கம் - தமது முந்திய நிலைப்பாடுகளை மையமாக வைத்துக்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளை தமது சர்வதேச காய்நகர்த்தலுக்குள் ஈர்த்துவிடலாம் என நினைத்தே அரசாங்கம் இந்தப் பதிலை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்தது. இதன்மூலம் தமது யோசனையைத் தமிழீழ விடுதலைப் புலிகள் நிராகரிப்பர். எனவே, அதனை வைத்துக்கொண்டு தமது காய்நகர்த்தலை சிறிது காலத்துக்குக் கொண்டுசெல்லலாம் என்ற குறுகிய நோக்கமே அரசாங்கத்திடம் இருந்தது.***

அதேநேரம், தமது நிராகரிப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேசத்தின் சுமைக்கு ஏற்ப மறைமுகமாகத் தெரிவித்துள்ளமை - இலங்கை அரசாங்கத்துக்கு ஈடாக யுத்த களத்தில் மாத்திரம் தாம் சமநிலையைக் கொண்டிக்கவில்லை, இராஜதந்திர ரீதியிலும் தாம் சமநிலையைக் கொண்டிருப்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் உணர்த்தியுள்ளனர்.

**தென்பகுதி அரசியல் தளம்பலின் மேலும் சில பகுதிகள்**

அரசாங்கம் பட்டதாரிகளுக்கு நிரந்தரத் தொழில்வாய்ப்பை வழங்கப்போவதாக உறுதியளித்த நிலையில், அதற்குப் பாதகமான கதை ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ளது. சுமார் 45 ஆயிரம், பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்கிய அரசாங்கம், அவர்களை ஓரிடத்தில் திரட்டி கடந்த திங்கட்கிழமை சுய சாதனையை ஏற்படுத்திக் கொண்டது.

ஆனால், அடுத்த நாளே ஜனாதிபதி குறிப்பிட்ட பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள அமைச்சுக்களின் செயலர்களை அழைத்துப் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளின் நியமனங்களை பயிற்சி நியமனங்களாகவே கருதுமாறும், இதனை வெளியில் கூறவேண்டாம் என்றும் பணிப்புரை விடுத்துள்ளதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனரட்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கு இன்னும் உரிய பதிலை அரசாங்கம் வழங்கவில்லை எனில் அதில் ஏதோ உண்மை மறைந்துள்ளதாகவே கருதவேண்டியுள்ளது. இதற்கிடையில் அரசாங்கமாக இருந்த காலத்தைக் காட்டிலும் எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஐக்கிய தேசியக் கட்சி சில நல்ல காரியங்களைச் செய்து வருகிறது எனக்கூறலாம்.

இதில் ஒன்றுதான், அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வாகும். இந்தமாதச் சம்பளத்துடன் புதிய அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தின் சம்பள உயர்வு கிடைக்கும் என நிதி அமைச்சர் தெரிவித்திருந்தபோதும், அது அவ்வாறு நடக்கவில்லை. இதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சி இதனைத் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திப் பிரசாரததை ஆரம்பிக்க முயன்றதை அடுத்து, இந்தமாத இறுதிக்குள் அந்த சம்பள உயர்வை வழங்க அரசாங்கம் முயன்றுவருகிறது.

இதேவேளை இதுவரைகாலமும் உள்நாட்டில் குறிப்பாக சிங்கள மக்களை கவரும் நிகழ்வுகளில் வெற்றிகண்ட ஜே.வி.பி-தற்சமயம் சர்வதேசத்துடன் மோத வேண்டிய நிலைக்கு ஆட்பட்டுள்ளது. இது ஜே.வி.பிக்கு ஒரு புறத்தில் அதன் ஆதரவாளர்களை உடனடியாகத் திருப்திப்படுத்தும் நிகழ்ச்சியாக இருந்தாலும், நீண்ட காலத்தில் பாதகத்தைக் கொண்டுவரும் என்றே கருதப்படுகிறது.

ஏனெனில், இதுவரை சர்வதேசத்தின் பக்கத்தில் அழுத்தங்களைத் தரக்கூடிய தமக்குத் தெரிந்த அனைத்தையும் மக்களின் முன்வைத்து, அதன்மூலம் மக்களின் செல்வாக்கைப் பெற்று வந்த ஜே.வி.பி. (அமெரிக்கா உட்பட ஏனைய நாடுகளின் எச்சரிக்கையை அடுத்து) இனிவரும் காலத்தில் தமது கருத்துக்களைக் கவனமாகக் கையாளவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியுள்ளது.

எனவே தமது ஆதரவாளர்களை உடனடியாக கவர்ந்திழுக்கும் செயற்திட்டங்களை அதற்கு மேற்கொள்ள முடியாமற்போகும் நிலை, அந்தக் கட்சிக்கு நீண்டகாலத்தில் அதன் ஆதரவாளர்கள் மத்தியில் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும்.

# உங்களுக்கு புத்தாண்டு யோகம் எப்படி?

## மேடம்

எதிலும் முதன்மையை விரும்பும் மேட ராசி அன்பர்களே உங்களுக்குச் சூரியன் உச்சமாகவும், செவ்வாய் ஆட்சி நாயகனாகவும் உளளார். நீங்கள் சிறந்த உடல் உழைப்பாளி. சற்று முன்கோபம் கொண்டவர்கள். உங்களுக்கு இந்தப் புத்தாண்டுத் தொடக்கத்தில் சுமாராக இருந்தாலும், போகப்போகச் சிறப்பானதாக அமையும்.

கடந்த சில மாதங்களாக நீங்கள் எண்ணற்ற இடர்பாடுகளைச் சந்தித்து இருப்பீர்கள். அதற்குக் காரணம் முக்கிய கிரகங்கள் சாதகமாக இல்லாததுதான். சனி பகவான் வக்கிர நிலையில் இருப்பதுதான். சனி சிறப்பான நிலையில் இருந்தும், அவர் வக்கிர நிலையில் இருப்பதால் அவரால் நன்மை தரமுடியாது.

ஆனால், அதைக்கண்டு அஞ்சவேண்டாம். வக்கிரத்தில் சிக்கி இருக்கும் சனி பகவான் மார்ச் 24 ஆம் திகதி வக்கிர நிவர்த்தி அடைந்து, நற்பலனைக் கொடுப்பார். அதன்பின் அவர் உங்கள் பொருளாதார வளத்தைப் பழைய நிலைக்குக் கொண்டுவருவார். தொழில் வளர்ச்சியைக் கொடுப்பார். பயணம் அனுகூலமாகும்.

ராகு உங்கள் ராசியில் இருந்து பல்வேறு இடர்பாடுகளைத் தருகிறார். வீண் அலைச்சல், இடப்பெயர்ச்சி போன்றவற்றால் நீங்கள் நிலைகுலைந்துபோய் இருப்பீர்கள். 7 ஆம் வீட்டில் இருக்கும் கேது, மனைவி வகையில் மனக்கலக்கத்தைக் கொடுத்திருப்பார். இப்படி இன்னல்களைத் தந்துகொண்டிருக்கும் ராகு-கேது பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி பெயர்ச்சி காண்கிறார். அதன்பின் ராகு 12 ஆம் இடத்துக்குச் செல்கிறார். இதுகூட அவ்வளவு சிறப்பான பலனைக் கொடுக்காது.

அவர் பொருள் விரயத்தை உருவாக்கலாம். ஆனால், அதேநேரம் கேது 6 ஆம் இடத்துக்குவந்து உங்களுக்குச் சிறப்பான பலனைக் கொடுப்பார். பொருளாதார வளத்தைக் கொடுப்பார். குருபகவான் தற்போது 6 ஆம் இடத்தில் இருப்பது அவ்வளவு சிறப்பானது அல்ல. அவர் உடல் உபாதைகளையும், மனத்தளர்ச்சியையும் கொடுப்பார். அந்தக் குருபகவான் செப்ரெம்பர் 14 ஆம் திகதி 7 ஆம் இடத்துக்குச் செல்கிறார். அதன்பின் உங்கள் நிலை மேலும் மேம்பாடு அடையும்.

மேற்கண்ட நிலையில் இருந்து பார்க்கும்போது, நாம் ஏற்கனவே கூறியபடி தொடக்கம் சுமாராக இருக்கும். இருந்தாலும் படிப்படியாக நன்மைகள் அதிகரிக்கும் ஆண்டாக அமையும் என்பதில் மறுப்பேதும் இல்லை. அந்த வகையில் விரிவான பலனை இங்கே காணலாம்.

நாம் ஏற்கனவே சொன்னபடி ஆண்டின் தொடக்கத்தில் எதையும் சிறப்பாகச் செய்து முடிக்கமுடியாத நிலை இருக்கும். பண விரயம், வேலைப்பளு, வீண் அலைச்சல், மனதில் ஒருவித சோகம் இவைகளால் நீங்கள் அதிகமாகவே பாதிப்புக்குள்ளாகி இருக்கலாம்.

படிப்படியாக அந்தநிலை அடியோடு மாறும். பெப்ரவரி முடிந்து, மார்ச் தொடக்கம் முதல் கேது உங்களுக்கு நல்ல பணப்புழக்கத்தைக் கொடுப்பார். அதன்பின் பொருளாதார வளம் அதிகரித்துக்கொண்டே இருக்கும். காரிய அனுகூலம் ஏற்படும். மனதில் துணிச்சல் ஏற்படும். தேவையான பொருட்கள் அனைத்தும் வாங்கலாம். செப்ரெம்பர் 14 ஆம் திகதிக்குப் பிறகு குருவால் மேலும் எண்ணற்ற பலனை அனுபவிக்கலாம்.

**குடும்பம்:-** வீட்டில் சிற்சில பிரச்சினை உருவாகி இருக்கும். மனைவி வகையில் ஏதாவது இடர்பாடுகள் வந்துகொண்டிருக்கும். அதற்கு நிரந்தரத் தீர்வைக் கேது மார்ச் மாதத்தில் தந்துவிடுவார். அவர் வீட்டில் அமைதியையும், ஆனந்தத்தையும் கொடுப்பார். கணவன் - மனைவியிடையே இருந்த பிணக்குகள் படிப்படியாக மறைந்து, ஒற்றுமை ஏற்படும். பிரிந்த குடும்பம் ஒன்றுசேரும். தடைப்பட்டு வந்த திருமணம் செப்ரெம்பர் 14 ஆம் திகதிக்குப்பிறகு கைகூடும். புது வீடு - புது மனைவி - புது வாகனம் என்ற அனைத்து அம்சங்களையும் பெறலாம். காலம். சிலர் தற்போது உள்ளதைவிட வசதியான வீட்டுக்குக் குடிபுகுவர். குழந்தைப் பாக்கியம் பெறலாம். விருந்து விழா எனச் சென்று வருவீர்கள்.

**உத்தியோகம்:-** என்ன உழைத்தாலும் நற்பெயர் கிடைத்திருக்காது. கடந்த சில மாதமாகப் பின்தங்கிய நிலையில் இருந்திருப்பீர்கள். சிலர் இடமாற்றத்தைப் பெற்றிருப்பீர்கள். இந்தநிலை இந்த ஆணடுத் தொடக்கத்தில் இருந்தாலும், குருவின் 9 ஆம் இடத்துப் பார்வை சிறப்பாக இருப்பதால், நீங்கள் மோசமான இடத்துக்கு வந்த உங்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டுசெல்வார்.

மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சக ஊழியர்கள் உதவிக்கரமாக இருப்பர். சிரத்தை எடுத்து முடித்த காரியத்தை அதன்பின் எளிதில் முடிப்பீர்கள். தடைப்பட்டுவந்த பதவி உயர்வு கிடைக்கும். உங்களைப் பற்றிப் புரியாதவர்கள் புரிந்துகொள்வார்கள். உங்களிடம் அனுசரணையாக நடந்துகொள்வார்கள். உங்கள் திறமை பளிச்சிடும். சிலருக்கு விரும்பிய இடத்துக்கு மாற்றம் கிடைக்கப் பெறலாம். சம்பள உயர்வு அதிகரிக்கும். எழுத்தாளர், பத்திரிகையாளர், ஆசிரியர் பணியில் இருப்பவர்கள் ஆகியோருக்கு இந்த ஆண்டின் பிற்பகுதி மிகவும் உன்னதமாக இருக்கும்.

**வியாபாரம்:-** போதிய வருமானம் இன்[illegible] இருந்த பிற்போக்கான நிலையில் இருந்து விடுபடுவீர்கள். மார்ச் மாதத்தில் இருந்து வருமானம் அதிகரிக்கும். கடன் திருப்பிச் செலுத்தலாம். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் கூடிவரும். உங்களுக்குப் பகைவர்களாக இருந்தவர்கள், உங்களைப்பற்றி உணர்ந்து உங்களிடம் அடைக்கலம் புகுவர். கொடுக்கல் - வாங்கல் சிறப்பாக இருக்கும். இரும்பு தொடர்பான தொழில், பழைய பொருட்கள் தொடர்பான தொழில் அனைத்தும் ஜூன் 27 ஆம் திகதிக்குப்பிறகு மிகச் சிறப்பாக வளர்ச்சி அடையும். பத்திரிகை, புத்தக வியாபாரம் போன்றவை செப்ரெம்பர் மாதத்தில் இருந்து மிகுந்த வளர்ச்சி காணும். பொதுவாக ஜூன் மாதம் 14 ஆம் திகதிக்குப் பிறகு புதிய வியாபாரம் தொடங்குவது நல்ல முன்னேற்றத்கைக் கொடுக்கும்.

வழக்கு விவகாரங்கள் சிறப்பாக இருக்கும். தீர்ப்பு வராமல் வழக்கு விசாரணை நீடித்துக்கொண்டேபோன நிலை மாறுபடும். தீர்ப்பு சாதகமாக வரும்.

பெண்கள் குதூகலமாகக் காணப்படுவர். குடும்பத்தில் உங்கள் செல்வாக்குப் பெருகும். வியாபாரத்தில் ஈடுபடும் பெண்களும், வேலை செய்யும் பெண்களும் படிப்படியாக வளர்ச்சி காண்பர். புத்தாடை, அணிகலன்கள், ஆடம்பரப் பொருட்கள் அதிகமாக வாங்குவீர்கள்.

உடல்நலம் சிறப்பாக இருக்கும். உடல் உபாதைகள் குணமாகும். மனதில் தெளிவு ஏற்படும். மருத்துவச் செலவு குறையும். நீண்ட நாட்களாக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தவர்கள், குணம் அடைந்து வீடு திரும்புவர்.

**பரிகாரம்:-**

ஆண்டு முழுவதும் ராகு சாதகமாகக் காணப்படவில்லை. எனவே சந்தர்ப்பம் கிடைக்கும்போது, ராகுகாலத்தில் துர்க்கை வழிபாடு நடத்துங்கள். விதவைப் பெண்களுக்கு இயன்ற உதவி செய்யுங்கள். செப்ரெம்பர் மாதம்வரை குருபகவான் திருப்தியற்ற நிலையில் உள்ளார். அந்தக் காலத்தில் வியாழக்கிழமைகளில் தட்சிணாமூர்த்தியை வணங்கி வாருங்கள். அப்போது கடலை தானம் செய்யலாம். முருகன் கோவிலுக்குச் சென்று வாருங்கள்.

# இயற்கையின் கோரத்தாண்டவத்துக்கு தமிழகத்தில் ஆயிரக்கணக்கானோர் பலி!

இந்தோனேஷிய சுமாத்ரா தீவில் ஏற்பட்ட சுனாமி பூகம்பம் இந்தியப் பெருங்கடலிலும் நேற்றுக்காலை இந்திய நேரப்படி காலை 6.40 மணிக்கு மிகப் பயங்கர நிலநடுக்க அதிர்வை ஏற்படுத்தியதில் மூவாயிரம் பேருக்கு மேல் பலியாகினர்.

இதன்படி தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் வரலாறு காணாத அளவுக்கு கடல் கொந்தளிப்பால் பேரழிவு ஏற்பட்டது. சென்னையில் நேற்றுக்காலை மூன்று தடவைகள் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தின் தொடர்ச்சியாக அடுத்தடுத்து அதிர்வுகள் உண்டாகின. இதனால் சுமார் 50 மீற்றர் தொடக்கம் 100 மீற்றர்வரை கடற்கொந்தளிப்பு ஏற்பட்டு, கடலோரக் குடியிருப்புப் பகுதிகளில் கடல்நீர் உட்புகுந்தது.

இவ்வாறு குடியிருப்புக்களுக்குள் கடல்நீர் உட்புகுந்ததால், பல்லாயிரக்கணக்கான மக்களின் குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டன. காலைவேளையில் கடல்நீர் கடலோரக் கிராமங்களுக்குள் புகுந்ததால், பெருமளவானோர் உறக்கத்திலிருந்த நிலையில் பெருமளவு உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன.

கடல்நீரின் சீற்றத்துக்கு கிராமவாசிகளால் தாக்குப்பிடிக்க முடியாத நிலையில், பெருமளவான சிறுவர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்களை கடல்நீர் அடித்துச் சென்றுவிட்டது. அத்துடன் கடலோரப் பகுதி மக்களின் உடைமைகள் அனைத்தும் கடல்நீரோடு அள்ளுப்பட்டுச் சென்றுவிட்டது.

தமிழ்நாட்டின் ஈச்சம்பாக்கம் அருகிலுள்ள வெட்டுவாங்கேணிப் பகுதியில் ஒரு பனை உயரத்துக்கு கடலலை சீறி வந்ததால் அப்பகுதியிலிருந்த 5 ஆயிரம் குடிசைகள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. கோவளத்தில் 25 மீனவக் கிராமங்கள் கடல்நீரில் மூழ்கிவிட்டன. லைட்ஹவுஸ் குப்பம், தாங்கள்திருபுழம் பகுதிகள் கடலுக்குள் மூழ்கியுள்ளன.

இந்தப் பகுதியில் சுமார் 50 ஆயிரம் பேர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் வெள்ளத்துக்குள் அகப்பட்டுள்ளதால் அவர்களை படகுகள் மூலம் மீட்கும் முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன.

மெரீனா கடற்கரையில் கடல்நீர் கிராமத்துக்குள் புகுந்துவிட்டதென்பதை அறிந்த திருவல்லிக்கேணி, மயிலாப்பூரைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் வேடிக்கை பார்க்கத் திரண்டனர். திடீரென ஏற்பட்ட மற்றொரு கடற்கொந்தளிப்பால் அவர்கள் அனைவரும் கடல்நீரில் அடித்துச்செல்லப்பட்டு, காணாமற் போயுள்ளனர்.

சென்னையில் கடலோரப் பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் குடிசைகள் கடல்நீரில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. இந்தக் குடிசைகளிலிருந்த பலர் கடல்நீரில் மூழ்கி உயிரிழந்துவிட்டனர். சென்னையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை வரலாறு காணாத வகையில் இருக்குமென அஞ்சப்படுகிறது.

தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் மாவட்டத்தில் மட்டும் சுமார் 1,500 பேர் கடல்நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தாலுகால், பேட்டை ஆகிய இரண்டு கிராமங்களும் முற்றாக நீரில் மூழ்கி அழிந்துவிட்டன. இந்த இரண்டு கிராமங்களிலும் சுமார் 500 பேர்வரை உயிரிழந்துள்ளனர். நாகை அரசாங்க வைத்தியசாலையில் மட்டும் சுமார் 500 சடலங்கள் வைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து சடலங்கள் வந்துகொண்டிருப்பதால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அங்கு வைக்கமுடியாத அளவுக்கு இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கடல்நீர் உட்புகுந்ததால் உறவினரையும், உடைமைகளையும் இழந்த நிலையில் மக்கள் செய்வதறியாது தவித்தவண்ணமுள்ளனர்.

சென்னையை அண்டிய கடற்கரைப் பகுதியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 150 ஐ தாண்டிவிட்டது. புதுவை மற்றும் காரைக்காலில் 102 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. கன்னியாகுமரியில் விவேகானந்தர் வீதிக்கு சுற்றுலா சென்ற 500 பேர் கடற்கொந்தளிப்புக் காரணமாக கடலுக்குள் சிக்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, தமிழ்நாட்டில் சுமார் ஐயாயிரம் மீனவர்கள் கடலுக்குள் சென்றதாகவும் அவர்களின் நிலை தொடர்பாக எதுவும் தெரியவரவில்லையெனவும் கூறப்படுகிறது.

கடலோரங்களில் நீரில் மூழ்கியவர்களை மீட்பதற்கு படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நீரில் தத்தளிப்பவர்கள் ஹெலிகொப்ரர்கள் மூலம் மீட்கப்பட்டு வருகின்றனர்.

## சுமாத்ராவில் மையங்கொண்டு பேரழிவை ஏற்படுத்திய சுனாமி!

இந்தோனேஷிய சுமாத்ராதீவில் இலங்கை நேரப்படி நேற்றுக்காலை 7.15 இற்கு இடம்பெற்ற சுனாமி என்ற பூகம்பம் அந்த நாட்டை மட்டுமல்லாது தென்னாசியாவின் மலேசியா, சிங்கப்பூர், பாங்கொங், இந்தியா, இலங்கை என பல்வேறு நாடுகளின் கரையோரப் பகுதிகளை மிகமோசமாகப் பாதித்ததில் பெருமளவில் உயிர், உடைமைச் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

நேற்றுக்காலை 7.15 மணியளவில் 8.9 ரிக்டர் அளவிற்கு இந்தோனேஷியாவில் ஏற்பட்ட பூகம்பம் சுமார் 20 நிமிடங்கள் நீடித்தது. இதனால் அங்கிருந்த கட்டடங்கள் மற்றும் அடுக்குமாடித் தொடர்கள் இடிந்து தரைமட்டமாகின. இந்தோனேஷியாவைச் சுற்றியுள்ள 17 ஆயிரம் தீவுகளில் பூகம்பத்தால் கடல்நீர் கொந்தளிப்பேற்பட்டு, பாரிய அலைகள் உருவானது. இதனால் கடல் அலைகள் குடியிருப்புப் பகுதிக்குள் புகுந்தன. இதனால் பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்டதுடன் மின்கம்பங்கள் தொலைத்தொடர்பு கம்பங்கள் என்பன சரிந்து வீழ்ந்ததால் மின்விநியோகம், தொலைத்தொடர்பு என்பன துண்டிக்கப்பட்டன.

சுமாத்ராதீவிற்கு மேற்கே 1620 கிலோ மீற்றர் தூரத்தில் பூகம்பம் உருவாகியுள்ளதாகவும், கடல் நீருக்கடியில் 40 கிலோமீற்றர் ஆழத்தில் பூகம்பம் மையம் கொண்டிருந்ததாகவும் வானிலை அவதான நிலையம் தெரிவித்தது. இந்தோனேஷியாவின் பினாங், இலாங் தீவு, பாண்டா தீவு, லோகசூமாவே நகரங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இந்தோனேஷியாவைத் தவிர மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் பூகம்பத்தின் அளவு 6.4 ரிக்டராக இருந்ததாகத் தகவல்கள் தெரிவித்தன.



தமிழ்நாட்டில் கடற்கொந்தளிப்பால் அடித்துச் செல்லப்பட்டோரை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஹெலி.



திருகோணமலையில் கடற்கொந்தளிப்பால் உயிரிழந்த தாய் மற்றும் குழந்தைகளின் சடலங்கள்.



திருகோணமலையில் கடற்கொந்தளிப்புக்குள்ளான கரையோரப் பகுதி ஒன்று

## அவசர கலந்துரையாடல்!

வடக்கு - கிழக்கில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் தொடர்பான அவசர கலந்துரையாடல் இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் அனைத்து பீட மாணவர்களுக்கும் நடைபெற விருப்பதால் அனைத்துப்பீட பல்கலைக்கழக மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

இதேவேளை வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருட்களை பல்கலைக்கழக மாணவர்கள் சேகரித்து வருகின்றனர். மக்கள் அனைவரும் தமது உலர்உணவு சேகரிப்புக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி உலர் உணவுப் பொருட்களை தந்துதவுமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

## அவசர வேண்டுகோள்!

வடகிழக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் வகையில் உலர் உணர்வு பால்மா, மருந்துவகைகள், புடவைகள் பணம என்பவற்றை மனிதநேய அடிப்படையில் தந்துதவுமாறு வர்த்தகர்களை வணிகர் கழகம் கேட்டுள்ளது.

பொருட்களை வழங்கும் வர்த்தகர்கள் வணிகர் கழகத்தில் காலை 9 மணி முதல் நேரில் வந்து ஒப்படைக்க முடியும். இந்த வேண்டுகோளை ஏற்று ஒவ்வொரு வர்த்தகரும் தனிப்பட்ட ரீதியில் பொருட்களை வழங்குமாறும இந்த அவசர நிவாரணப் பணி தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பான அவசர பொதுக கூட்டம் இன்று காலை 10.30 மணிக்கு கழகத்தில் நடைபெறவுள்ளது எனவும் வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

## ஊரகக்கிளை இடம்மாற்றம்

முல்லைத்தீவு நகரில் இயங்கி வந்த தமிழீழ வைப்பகத்தின் ஊரகக் கிளை இன்றுமுதல் தற்காலிகமாக லூர்துமாதா சந்திக்கருகில் எட்டாம் வட்டாரம் புதுக்குடியிருப்பிலுள்ள நடுவப்பணியகத்தில் இயங்கவுள்ளதாக ஆளுகை மேலாளர் அறிவித்துள்ளார்.

## தேசிய பேரழிவாக ஜனாதிபதி பிரகடனம்

நாட்டின் பல பகுதிகளிலும் நேற்றுக்காலை ஏற்பட்ட அனர்த்தத்தை தேசிய பேரழிவாக ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார்.

லண்டனிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். பிரதமர் தலைமையில் முக்கிய அமைச்சர்கள், ஜனாதிபதியின் செயலாளர், பொலிஸ் மா அதிபர் தலைமையில் விசேட கூட்டம் ஒன்றைக் கூட்டுமாறும் அவர் உத்தரவிட்டார்.

இதேவேளை நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்தம் தொடர்பாக அவசரகால உதவிகளை வழங்குமாறு சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையை அடுத்து ஜனாதிபதி வெகுவிரைவில் நாடு திரும்பவிருப்பதாகவும் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளனது.

## வடமராட்சியில் காயமுற்றோர்!

(வடமராட்சி)

வடமராட்சியின் கரையோரப் பகுதிகளில் நேற்றுக்காலை ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

காயமுற்ற பொதுமக்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளோரின் விபரம் வருமாறு -

இராகவன் (8), என்.நடராஜா, எஸ்.ஆனந்தம் (தும்பளை), பி.றொபேட் பரிஸ், அன்ரனி எட்வேட், சிவரூபன் (28), யோகப்பு (64), ஜே.அன்ரன் (48 - பொலிகண்டி), சுதன் (30), கதிஸ்வரன் (18), சுதாகரன் (25), ராகுலன், தவமூர்த்தி (25 - கற்கோவளம்), கே.கண்ணன் (வயது 20), கைலநாதன் ( 55), சிவலிங்கம் (53), மனோகரராஜா (41), டிக்ஸன் (31), மைக்கலன் (45), ராஜசேகரன் ( 44), அந்தோனிமுத்து (50), சீவரத்தினம் ( 48), அன்சலின் ( 16), குகதேவன் (31), சத்தியன், பி.ஐ.யோகன் (26), சுதர்ஸன் சுந்தரலிங்கம் (பொலிகண்டி), 'ஜெகவர்மன் (31), சின்னத்தம்பி (80), பிலிப் அல்பேட் (57), ஜெயக்குமார் (37 - கற்கோவளம்), செல்வகுமார் (38 - தும்பளை), ரகுபரன் (48), செபஸ்ரியான்பிள்ளை (69), இருதயகுமார் (24), மயூரன் (23), சிவானந்தன் (48).

மணியரோகினி (34 1ம் கட்டை வியாபாரி மூலை), கே.ரத்தினம்மா (44 - வெளிச்சவீடு ஒழுங்கை, பருத்தித்துறை), தனுசன் (21/2 பொலிகண்டி), ஜெயலக்ஷ்மி (54 - கல்லூரி வீதி, பருத்தித்துறை), ரி.இன்பம் (32 - சக்கோட்டை), ஜசிந்தா (28- 1ம் குறுக்குத் தெரு), யோகேஸ்வரி (37- வி.எம்.றோட், பருத்தித்துறை), தினேஷ் (09 - குடத்தனை), ஜே.ஜனனி (18 - வெளிச்சவீடு, பருத்தித்துறை). ஜீவரத்தினம்மா (72 - 1ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை), பரமேஸ் (38 - ஆதிகோவிலடி), மேரி யூலி (21 - ஆதிகோவிலடி), லூத்தம்மா (55 - பொலிகண்டி), அன்ரனியம்மா (71 - பொலிகண்டி), இராஜேஸ்வரி (58 - வல்வெட்டித்துறை), இரத்தினம் (40), பிரசாந்தி (05 - சக்கோட்டை), மரியசீலி (22 - சக்கோட்டை), வி.பிறேமாவதி (52 - தும்பளை), ஆரியமலர் (27 - பருத்தித்துறை), மனோன்மணி (தாளையடி), எம்.ராகினி (30 - சக்கோட்டை), மேரி திரிஷா (26- வெளிச்சவீடு, பருத்தித்துறை), செல்வராணி (38 - பொலிகண்டி), ரதிஸ் குமாரி (ஆலடி, பொலிகண்டி), கிருஷ்ணரூபி (9), நிதம்மாசி (74) (12,14)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# உடனடி மனிதாபிமான உதவிக்கு விடுதலைப் புலிகள் கோரிக்கை

## யாழ்.மாவட்ட அரசியற்துறையினர் பொதுமக்களுக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடற்கொந்தளிப்பு ஏற்பட்ட பிரதேசங்களுக்குத் தேவையின்றிப் பொதுமக்கள் எவரும் செல்லவேண்டாம் என யாழ்.மாவட்ட அரசியற் துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடற்கொந்தளிப்பு அனர்த்தம் ஏற்பட்ட பிரதேசங்களில் மீண்டும் கடற் கொந்தளிப்பு ஏற்படக் கூடும் என்றும், இராணுவத்தினரின் வெடி பொருட்கள் ஆங்காங்கே மிதந்து செல்வதாலும், உயிரிழப்புக்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக அனர்த்தங்கள் இடம்பெற்ற பிரதேசங்களுக்கு பொதுமக்கள் எவரும் செல்ல வேண்டாம் என யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

இதேசமயம் கடற்பெருக்கினால் காயமடைந்த பலநூற்றுக்கணக்கான மக்களுக்கு இரத்தம் ஏற்றுவதற்கு குடாநாட்டு வைத்திய சாலையில் இரத்தத்துக்கு தட்டுப்பாடு நிலவுவதால் பொதுமக்கள் மனிதாபிமான ரீதியில் உடனடியாக இரத்ததானம் வழங்குமாறும் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

(யாழ்ப்பாணம்)

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பகுதி மக்களுக்கு உடனடி மனிதாபிமான மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு உதவும்படி சர்வதேச சமூகத்திற்கும், உதவி வழங்கும் நாடுகளுக்கும் அவசர வேண்டுகோள் - தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனால் விடுக்கப்பட்டது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கடலின் சீற்றத்தால் அள்ளுண்டு போயுள்ளதோடு மேலும் பல்லாயிரக் கணக்கானோர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள மருத்துவ ஸ்தாபனங்கள் காயமடைந்தவர்களால் நிரம்பி வழிகின்றன. தமது வீடுகளையும், உடைமைகளையும் முற்றாக இழந்த மக்கள் இடம்பெயர்ந்து தற்போது பாதுகாப்பான இடங்களில் உள்ள பொதுக்கட்டடங்களில் தஞ்சம்கோரி நிற்கின்றனர்.

மக்கள் அமைப்புக்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உள்ளிட்ட உள்ளூர் தொண்டர் நிறுவனங்கள் சமூகப்பணியாளர்கள், உள்ளூர் இளைஞர்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நெறிப்படுத்தலில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஓய்வின்றி செயற்பட்டு வருகின்றனர்.

நிதி மற்றும் பௌதீக வளக் குறைவுகளின் மத்தியில் மீட்புக்களுக்குள் அதிகபட்ச நிவாரண உதவிகளை வழங்கும் வகையில் பணி புரிகின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உடுபுடவை, பாய் படுக்கை விரிப்புக்கள், நில விரிப்புக்கள், சமைத்த உணவு என்பன தேவைப்படுகின்றன.

மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கு போக்குவரத்து வசதிக் குறைவு பெரும் இடர்பாடாக உள்ளது. அடிப்படைச் சுகாதார வசதிகள் அற்று பொதுக் கட்டடங்களில் பெருந்தொகையான மக்கள் தஞ்சம் கோரியிருப்பதால் பெரும் சுகாதாரக்கேடும் தொற்று நோய் அபாயமும் ஏற்படும் என அஞ்சப்படுகிறது.

இந்த அனர்த்தத்தில் இருந்து மீள்வதற்கு தேவையான அனைத்து வளங்களையும் ஏற்படுத்திக் கொடுத்து ஓர் மானுட அவலத்தை தவிர்க்க உதவுமாறு நாம் சர்வதேச சமூகத்திடம் அவசர வேண்டுகோளொன்றை விடுக்கிறோம்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இப்போது ஏற்பட்டுள்ள இந்த மனித அவலத்தில் இருந்து உயிர் பிழைத்தவர்களுக்கு உடனடியானதும், காத்திரமானதுமான மனிதாபிமான உதவி அவசரமாக தேவைப்படுகிறது. இந்தவகையில், பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகள் விரைவில் கிடைக்கத் தக்க வகையில் நன்கொடை நாடுகளும், ஐ.நா அமைப்புக்களும், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் உதவ வேண்டும் என நாம் வேண்டிநிற்கிறோம்.

## மருத்துவபீட மாணவர்களுக்கு அவசர அழைப்பு!

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் இன்று யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் அங்கு செல்லவுள்ளனர்.

எனவே இன்று காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் அனைவரையும், அவர்களுக்குத் தேவையான உடுப்புக்கள் மற்றும் வைத்திய உபகரணங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன் ஒன்றுகூடுமாறு யாழ்.பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர்.

## கீரிமலைக்கு...

வர்களே பிதிர்க்கடன் செலுத்துவதற்காக சென்றதாகவும் இவர்களில் பிரதீபன், ஜெயநாதன், ரவீந்திரன் , பிரதீப், ராமச்சந்திரன், அற்புததேவன், பரமநாதன், ராம்குமார், மனோகரன், பிரதீபன், தயாபரன், காங்கேயன், யசிதரன், தர்சன், நிசாந்தன், சிந்துஜன், பிரகலாதன், ஆகியோர் கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இவர்களை மீட்பதற்காக கடற்படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் காணமாற்போய் சடலமாக மீட்கப்பட்டவர்களில் அற்புததேவன் (மாயவன்) மற்றும் அவருடைய சகோதரனும் அடங்குவதாகவும் தெரியவருகிறது.

(72)

## ஆயிரத்துக்கும் மேற்பட்டோர்...

பாடசாலைகள் போன்றவற்றில் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்த கடற்கொந்தளிப்பினால் படையினர் தரப்பிலும் பாரிய உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது. கல்குடா முகாமில் 2 உயரதிகாரிகள் உட்பட 40 படையினர் காணாமற்போயுள்ளனர். மாங்கேணி, கஜூபாம் முகாம், களுவங்கேணி முகாம் ஆகியனவும் பலத்த சேதமடைந்துள்ளன.

உயிரிழந்த படையினரில் 233 ஆவது கட்டளைத்தளபதி பிரிகேடியர் வஜிர குணவர்த்தனவும், அவரது மகனும் அடங்குவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாவட்டத்தில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பினால் மாங்கேணி, ஆனைமடு, இலக்கு, கல்குடா, பாலமடு, கோட்டைமுனை, சித்தாண்டிக்குடி, ஏறாவூர், காத்தான்குடி, தாளங்குடா, குருக்கள்மடம், கொக்கட்டிச்சோலை, கற்குடா, செங்கலடி, வாழைச்சேனை போன்ற இடங்கள் முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

## 1500 இற்கும்...

யும் இடித்துக் கொண்டு உட்புகுந்த கடல்நீரில் நூற்றுக்கணக்கானோர் அடித்துச்செல்லப்பட்டனர்.

நிந்தவூரில் இஸ்லாமியப் பாடசாலை ஒன்றில் குர்றான் வகுப்பைச் சேர்ந்த சுமார் 50 குழந்தைகள் கடற்கொந்தளிப்பினால் உயிரிழந்ததாகத் தெரியவருகிறது.

இதே சமயம் கடற்பெருக்கெடுப்பு காரணமாக கல்முனையில் 1050 பேரும் பொத்துவிலில் 20 பேரும், அக்கரைப்பற்றில் 20 பேரும, திருக்கோயிலில் 140 பேரும் உயிரிழந்ததாகத் தெரியவருகிறது.

## ஆயிரத்துக்கும்...

படுகாயங்களுக்குள்ளாகினர்.

குறிப்பாக கள்ளப்பாடு, சிலாவத்தை, முல்லைத்தீவு, செல்வபுரம் ஆகிய இடங்கள் பேரழிவுகளுக்குள்ளாகியுள்ளன. வட்டுவாகல் பாலம் இரண்டு இடங்களில் உடைநதுள்ளது.

இந்த அனர்த்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, புதுக்குடியிருப்பிலுள்ள பாடசாலைகள், முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம், நெடுங்கேணி மகா வித்தியாலயம், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், கற்சிலைமடு அ.த.க பாடசாலை போன்றவற்றில் தங்கியுள்ளனர்.

இந்த அனர்த்தங்களால் உயிரிழந்தவர்களின் சடலங்களையும், காயமடைந்தவர்களையும் மீட்கும் பணியில் கடற்புலிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர், பொது அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

காயமடைந்த சுமார் 300 பேர் நெடுங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## வடமராட்சி...

மருதங்கேணி வைத்தியசாலையில் மட்டும் நூறுக்கும் மேற்பட்ட சடலங்கள் இருப்பதாகவும் மேலும் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு 110 சடலங்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் உயிரிழந்தோர் தொகை 300 இற்கும் அதிகமாக இருப்பதாக இன்னொரு தகவல்கள் தெரிவித்தது.

நேற்றுமாலை வரை 450 பேரது சடலங்கள் மீட்கப்பட்டன. இந்தச் சம்பவத்தில் வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் வரை காயமடைந்து யாழ்ப்பாணம், மற்றும் கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் மட்டும் சுமார் 600 பேர் காயமுற்ற நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இப்பகுதியில் அழிந்துபோன வீடுகளுக்குள் பெருமளவானோர் அகப்பட்டிருப்பதாகவும், மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெறுவதாகவும் தெரியவருகிறது.

வடமராட்சி கிழக்கில் தேவாலயம் ஒன்றில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த பலர் கடற்கொந்தளிப்பால் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இந்தப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணியில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

## கடல்...

அத்துடன், பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந்து அவசர மருத்துவ வசதிகளின்றி அல்லல்படுவதுடன், லட்சக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து நிர்க்கதி நிலையில் உள்ளனர்.

இலங்கையில் வரலாற்றிலேயே மிக மோசமான இந்த இயற்கைப் போரழிவில் ஆயிரக் கணக்கானோர் காயமடைந்திருப்பதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை உயரலாம் என்று அஞ்சப்படுகிறது.

உயிரிழந்தோரில் பெரும்பாலானோர் சிறுவர்கள் என்றும் கூறப்படுகிறது.

## வடமராட்சிப் பகுதி...

250 முதல் 600 மீற்றர் தூரம் வரை கடல்நீர் குடியிருப்புப் பகுதிகளுக்குள் உட்புகுந்தது. இதனால் தொண்டமனாறு முதல் நாகர் கோயில் வரையான கரையோரப் பகுதிகளில் படையினர் அமைத்திருந்த காவலரண்கள், முகாம்கள் என்பன பலத்த சேதமடைந்தன.

திடீரென ஏற்பட்ட இந்த அனர்த்தத்தையடுத்து உடுத்த உடையுடன் கரையோரப் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினர்.

இவர்கள் பாடசாலைகள், பொதுக கட்டடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும் நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உயிரிழந்தோர், காயமடைந்தோரால் மந்திகை வைத்தியசாலைப் பகுதி நிரம்பி வழிவதுடன் எங்கும் மரண ஓலங்களும் அழுகையுமாகக் காணப்பட்டது.

இந்தப் பேரனர்த்தத்தையடுத்து கரையோரப் பகுதி மக்கள் முழுமையாக வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வடமராட்சியில் 15 பாடசாலைகளிலும், தென்மராட்சியில் 10 பாடசாலைகளிலும் மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

உதவிப் பணிகளை மேற்கொள்வதற்காக கரவெட்டி பிரதேச செயலகம், வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவை, யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் ஆகியவை உடனடி நடவடிக்கைக்காக திறக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு மரணச் சடங்குச் செலவாக- இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய அனர்த்தத்தால் காரைநகர் முதல் மருதங்கேணி வரையான பகுதிகளில் 20 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

(14,12)

## கடற்கொந்தளிப்பில்...

திருகோணமலை மாவட்டத்தின் புறநகர்ப் பகுதிகளான கும்புறுப்பிட்டி, நிலாவெளி, குச்சவெளி, கோபாலபுரம், புல்மோட்டைப் பிரதேசங்களும் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலையின் வட பகுதிக்கிராமங்களான மூதூர் ஈச்சிலம்பற்று, கிளிவெட்டி, சம்பூர், பூடைக்குடா, உப்பூரல் செபமடு, அரக்ககண்டி, உப்புவெளி, தம்பலகாமம், தாமரவில்லு, கட்டை பறிச்சான், இலக்கந்தி, மலை முந்தல், தோப்பூர், வெருகல், ஈச்சிலம்பற்று ஆகிய பிரதேசங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டன.

கடற்கொந்தளிப்பால் மூதூர்ப் பிரதேசத்தில் மட்டும் 267 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதேசமயம் திருகோணமலை நகரில் 39 சடலங்களும் சீனன்குடாப் பிரதேசத்தில் 252 சடலங்களும், கிண்ணியாவில் 450 சடலங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலானவர் சிறுவர்களும் பெண்களுமே இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமலை வைத்தியசாலையில் சடலங்கள் வைக்கும் அறை நிரம்பியுள்ளதால் வைத்தியசாலையின் வெளிப் பகுதிகளில் சடலங்கள் வைக்கப்பட்டுள்ளன.

திருமலை மாவட்டத்தில் ஏற்பட்ட அனர்த்தத்தால் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாகவும் இவர்களில் 32 பேரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை - நிலாவெளி கடற்பகுதியில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பால் இரு வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் கடலினுள் அடித்துச்செல்லப்பட்டதுடன் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேசமயம் கிண்ணியாவில் இருந்து திருகோணமலை நோக்கி வந்த பஸ் ஒன்று லிங்கநகர்ப் பகுதியில் அலையினால் தாக்கப்பட்டு தடம்புரண்டதில் இரு சிறுவர்கள் கொல்லப்பட்டதுடன் 17 பேர் படுகாயமடைந்தனர்.

மீண்டுமொரு கடற்கொந்தளிப்பு ஏற்படும் என்ற அச்சம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்த வண்ணம் உள்ளனர்.

உவர் மலை விவேகானந்தாக் கல்லூரி, குழந்தையேசு ஆலயம், திருமலை இந்துக்கல்லூரி, புனித சென்.சேவியர் வித்தியாலயம், மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகிய பாடசாலை உட்பட்ட பொது இடங்களில் பொதுமக்கள் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இதேசமயம் 12 கடற்படையினர் அலையினால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளதாக திருமலை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

திருமலை சல்லிக்கிராமம் முற்றாக கடல் நீரினால் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. இங்கு பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (04,10)

கண்ணீர் அஞ்சலி

பிரபல அச்சு இயந்திரத் தொழில்நுட்பவியலாளரும்
எமது அன்புக்கும், மதிப்பிற்குமுரியவருமான
திரு.முத்துக்கிருஷ்ணர் அற்புதத்தேவன் (மாயவர்) அவர்கள்
இயற்கையின் கொடூரத்தில் சிக்கி காலமான செய்தி கேட்டு
அதிர்ச்சியடைந்தோம். அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

'நமது ஈழநாடு'
பணிப்பாளரும், பணியாளர்களும்.

(இ)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.